பக்கங்கள்: 19

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை 10.11.2019 | கதிர் 05

### இனி இது ரகசியம் அல்ல!

சுமந்திரன் எம்.பியின் முகநூல் பக்கத்தை ஒரு தடவை மேய்ந்தேன். 'கனவும் நினைவும்' என்ற புளொக் ஸ்பொட் பக்கம் ஒன்றின் இணைப்பைத் தொடுத்திருந்தார். அந்த புளொக் ஸ்பொட் பக்கத்தின் கட்டுரை ஒன்றைத் இணைத்திருந்த அவர்

பக்கம் 02 »

# ரெலோவுக்குள் பிளவு!

## சஜித்தை ஆதரித்த தீர்மானம் தவறு என்றும் சிவாஜிக்கே ஆதரவு என்று சிறிகாந்தா தலைமையிலான குழு முடிவு

யாழ்ப்பாணம், நவ. 10

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதெனத் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக் குழு எடுத்த தீர்மானம் தவறானது என்றும், சிவாஜிலிங்கத்துக்கே தமது ஆதரவு எனவும் கட்சியின் யாழ். மாவட்டக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பக்கம் 03 »

## முதல் பிரசாரக் கூட்டத்தை நேற்று புறக்கணித்த ரெலோ

வவுனியா, நவ.11

ஜனாதிபதிவேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்துதமிழ்தேசியக் கூட்டமைப்பினால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ரெலோ கட்சி புறக்கணித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில்முதல்தேர்தல் பிரசாரக் கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில்

பக்கம் 02 »

## யாழ்.பல்கலை மாணவர்களின் முயற்சி தோற்றுப்போகவில்லை

### கூறுகிறார் வடக்கு அவைத் தலைவர்

(எஸ்.நிதர்சன்)

யாழ்ப்பாணம், நவ.10

தமிழ்த் தேசிய வரலாற்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட முயற்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து உருவாக்கிய 13 அம்சக் கோரிக்கைகளும் தொடர்ந்தும் வலுவாகவே இருக்கும். பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சி தோல்வியடைய

பக்கம் 03 »

## நாட்டை பிரிப்பவர்களையே கூட்டமைப்பு ஆதரிக்கின்றது

### சாடுகின்றார் கோட்டாபய



கொழும்பு, நவ. 10

நாட்டைப் பிளவுபடுத்த உதவுவோருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவை வழங்கியுள்ளது என்று பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ

பக்கம் 02 »

### றோயல் பார்க் கொலை;

## தூக்குத் தண்டனைக் கைதிக்கு மன்னிப்பு வழங்கிய மைத்திரி

கொழும்பு, நவ.10

வெளிநாட்டுப்பெண் ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் சமந்த ஜயமகவை பொது மன்னிப்பு வழங்கி விடு விக்கும் உத்தரவை ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன வழங்கியுள்ளார்.

பதவிக்காலம் நிறைவடைய 7 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில் இந்த

பக்கம் 02 »

## நாடகம் ஆடியது தமிழரசுக் கட்சி

### சாடுகின்றார் சுரேஷ்

(எஸ்.நிதர்சன்)

யாழ்ப்பாணம், நவ.10

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சி ஏற்கனவே தமது முடிவை எடுத்துவிட்டு தமிழ்க் கட்சிகள் ஒருமித்த முடிவை எடுப்பது தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு நாடகமொன்றை அரங்கேற்றியிருப்ப

பக்கம் 02 »

## ரெலோவின் ஆதரவு எனக்கே!

### சிவாஜிலிங்கம் நேற்று அறிவிப்பு

வவுனியா, நவ. 10

ரெலோவின் பலர் எனக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தடுமாறுகின்றார் என ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பக்கம் 02 »



## கோட்டபாய இம்முறை வென்றால் இனித் தேர்தல் ஒன்றே நடைபெறாது

### அபாயச் சங்கு ஊதினார் சுமந்திரன் எம்.பி.



வவுனியா, நவ. 10

கோட்டபாய இம்முறை வெற்றி பெற்றால் இனித் தேர்தல் ஒன்றே நடைபெறாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சஜித் பிரேம

பக்கம் 03 »

## புலிகளை அழித்தமையால் எம்மை ஏமாற்றலாம் என எண்ணுவது தவறு

### வவுனியாவில் இரா.சம்பந்தன் எடுத்துரைப்பு



வவுனியா, நவ. 10

விடுதலைப் புலிகளை அழித்தமையால் எம்மையும், தமிழ் மக்களையும் ஏமாற்றலாம் எனச் சிலர் நினைக்கின்றனர். அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது.

–இவ்வாறு நேற்று வவுனியாவில் வைத்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்,

பக்கம் 02 »



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கட்டுரையில் வந்த ஒரு பகுதியைத் தொட்டுக் காட்டியிருந்தார்.

அந்தக் கட்டுரை இன்றைய 'காலைக்கதிர்' நாளிதழில் 16ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. அதில் சுமந்திரன் தொட்டுக் காட்டியுள்ள பகுதி பின்வருமாறு அமைந்திருந்து:–

*நாங்கள் எதிர்பார்த்த அனைத்தும் கிடைக்கவில்லை என்பதும் உண்மை. முப்படைகளை வைத்துக்கொண்டு, மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பையும், மூன் றில் இரண்டு பங்கு நீர்ப்பரப் பையும் கட்டுப்பாட்டில்வைத்துக்கொண்டு, கொழும்பையே ஆட்டிப் படைத்த காலத்திலேயே அடைய முடியாதவற்றை, பதினாறு பேரை நாடாளுமன்றத் திற்கு அனுப்பி விட்டு அடையலாம் என்று எதிர்பார்த்து இருந்தும் பிழைதானே"*

– இதுவே அந்தக் கட்டுரையில் சுமந்திரன் தேடிப்பிடித்து உயர்த்தும் வாசகம்.

சரியான அர்த்தங்கள் நிறைந்த – ஆழங்கள் பொதிந்த –வாசகம் தான் இது. அதுவும் விடுதலைப் புலிகள் கால சாதனையை – பெருமையை – வீரத்தை – பேசுகின்ற இந்த வாசகத்துக்குள்ளேயே சுமந்திரனும், நாங்களும், இக்கட்டுரையாளரும் படிக்க வேண்டிய ஒரு பாடம் பொதிந்து கிடக்கின்றது. அதை நாம் புரிந்து கொண்டோமா என்பதுதான் எனது கேள்வி.

இவ்வளவு வரலாற்றுச் சாதனை புரிந்த புலிகளால் பெற முடியாதவற்றை நாடாளுமன்றப் பலத்தைவைத்துக் கொண்டு பெற்றுவிட முடியுமா என்ற கேள் விக்குப் பின்னால் தொக்கி நிற்பது நமது இயலாமை பற்றிய சிந்த னைதான்.

ஆனால், புலிகளின் அந்தச் சாதனைக்குள் பொதிந்து கிடக்கும் ஓர் அற்புதமான விடயத்தை இந்த வாசகத்துக்குள் இருந்து பொறுக்கி எடுத்து, புரிந்து, உணர்ந்து, மனதில் இருத்திக் கொள்வோமேயானால் அந்த இயலாமையைத் தாண்டிய ஓர் இயலுமை எமக்குக் கிட்டும் என நான் நம்புகின்றேன்.

இலங்கைத் தீவில் நாம் – தமிழர்கள் – வெறும் பன்னிரண்டு வீதம்தான். அதிலும் அரைவாசிப் பேரே வடக்கு, கிழக்கில் வசிக்கின்றனர். எஞ்சியோர் தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு வெளியே தீவின் பிறபகுதிகளில் சிதறுண்டு வாழ்கின்றார்கள்.

ஆக, இந்த ஆறு வீத மக்கள் மத்தியிலிருந்து முகிழ்ந்த –தன்னார்வப் போராளிகளாக வெளிக்கிளம்பிய – ஒரு சிறிய படையே, ஏறத்தாழ எழுபது வீதத்துக்கும் அதிகமான சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு முழு தேசத்தின் – சர்வதேச ஆதரவைப் பெற்ற ஒரு சட்ட பூர்வமான நாட்டின் – முப்படைகள், பொலிஸ் என்ற ஒரு விஸ்வரூவப் படைக் கட்டமைப்புக்கு எதிராக சுமார் இருபது வருட காலம் கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டியது! இந்தக்கட்டுரையாளர் குறிப்பிட்டமை போல முப்படைகளையும் வைத்துக் கொண்டு, இலங்கைத் தீவின் மூன்றில் ஒரு பகுதி நிலப் பரப்பையும், தீவின் மொத்தக் கடற்கரையோரத்தின் மூன்றில் இரண்டு பங்கையும் தனது கட்டுப் பாட்டில் வைத்துக் கொண்டு ஆட்டிப் படைத்தது. சர்வதேசத் தையே மூக்கின் மேல் விரலை வைக்கச் செய்தது.

வெறும் ஆறு வீத மக்கள் கூட்டத்துக்குள் இருந்து முகிழ்ந்த ஒரு சுய எழுச்சிப் போராளி அமைப்பிற்கு – பிறதரப்புகள், தேசங்களின் ஆதரவு ஏதுமின் றியே – இந்த வரலாற்றுத் தகுதி, சாதனை, எண்ணியே பார்க்க வொண்ணாத் திறமை எவ்வாறு சாத்தியமாயிற்று? எங்ஙனம் சாத்தியமாயிற்று?

அந்த அமைப்பின் தலைமையினதும், போராளிகளினதும் தளரா முயற்சி, தீர்மானத்தில் பற்றுறுதி, கொள்கையில் விடாத பிடிவாதம், குறிக்கோளில் தெளிவு, செயற்பாட்டில் திடசங்கற்பம், பொதுவாழ்வில் உச்சத்தியாகம், இலக்குக்காக எதையும் ஈகம் செய்யும் பண்பியல்பு, நேர்மைத் திறம் இப்படி பல காரணங்கள். சுருங்கச் சொன்னால் முழுமையான அர்ப்பணிப்பு வாழ்வு.

ஆயுதப் போராட்டத்தில் புலிகள் காட்டிய அந்த உயரிய பண்பியல்புகளை ஜனநாயகப் போராட்டத்திலும் நமது தலைவர்கள் காட்டுவார்களாயின் வானம் வசமாகும்;இலக்கு எட்டப்படும்; நோக்கம் கையை வந்தடையும்.

முப்படைகளையும் காவல் துறையையும் வைத்துக்கொண்டு புலிகள் சாதித்தவற்றில் ஒரு சிறு துரும்பையேனும் இப்போது நாம் எட்டுவதாயின் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னர் தமிழரின் ஜனநாயக அரசியல் போராட்டத்தை முன்னடுப்பவர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்வோர் புலிகளின் பற்றுறுதி, திடசங்கற்பம், தியாகப் பண்பியல்பு, இனநலம் நாடிய சுயநலத்துறப்பு, விஞ்சிய ஈகம் போன்றவற்றில் பத்து சத வீதத் தையாவது, தமது சுயநலன்துறந்து பொதுநலநோக்கில் வெளிப்படுத்தி முன்னெடுக்கத் தயாராக வேண்டும்.

வெறுமனே புலிகளின் தீரத்தைப் பாடிப் புகழ்ந்து விட்டு, அவர்களினாலேயே செய்ய முடியாதவற்றை நாம் எப்படிச் செய்வது என்று கருதி சமாளிப்பது அரசியல் கோழைத்தனம். அரசியல் தலைமைக்குப் பொறுப்பற்ற போக்கு.

இது எனது கருத்து. அவ்வளவே!

-மின்னல்-

## நாட்டை பிரிப்பவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில்–நாங்கள் சவால்களை வென்ற குழு. சவால்களைச் சமாளிக்க பணியாற்றக்கூடிய ஒரு குழு எங்களிடம் உள்ளது. எனக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து வேலைகளையும் செய்துள்ளேன். பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக, எனக்குப் பொறுப்புகள் வழங்கப்பட்டன. நான் அமைச்சராக இல்லாவிட்டாலும், எனது சபதம் நிறைவேறியது. அரசின் சக்திவாய்ந்த அமைச்சர் ஒருவர், மக் கள் சொல்வதைச் செய்யாமல் அவர்கள் சொல்வதைச் செய்கி றார்கள் என்று சொல்வது நகைப்புக்குரியது.

அவர் அமைச்சரவையின் அங்கத்தவராக உள்ளபோது பொலிஸ் பிரதானியொருவர் சட்டத்தை மீறத் தயாராக இருப்பதாக சொல்வது நகைப்புக்குரியது.

சமூக ஊடகங்களில் தவறான குற்றச்சாட்டுகளைக் கூறி மக்களை ஏமாற்ற மக்கள் முயற்சி செய்கிறார்கள்.

நாட்டைப் பிளவுபடுத்த ஆதரவளிப்பவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கிறது என்பது அவர்களின் அறிவிப்பிலிருந்து தெளிவாகிறது. அந்த வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை. 30 ஆண்டுகளுக்குப் பிறகு, நாங்கள் வடக்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி ஜனநாயகத்துக்கு உறுதியளித்து வருகிறோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அனைத்துத் தகவல்களையும் வெளிநாட்டு உளவுத் துறை வழங்கியிருந்தது. ஆனால் இந்த அரசால் அதைத் தடுக்க முடியவில்லை. அதற்கு அமைச்சரவையே பொறுப்பு.

நம் காலத்தில் பல வளர்ச்சித் திட்டங்கள் இருந்தன. எங்கள் அரசின் தோல்வியுடன் அந்தத் திட்டங்கள் நிறுத்தப்பட்டன. இப்போது கொழும்பு– இரத்தினபுரி அதிவேகநெடுஞ்சாலைமுடிக்கப்பட வேண்டியிருந்தது. இன்று, அந்தத்திட்டங்கள் முடிக்கப்படவில்லை. இந்தத்திட்டங்கள் அனைத்தையும் நாங்கள் முடித்து, அதிவேக நெடுஞ்சாலையைக் கொழும்பிலிருந்து இரத்தினபுரி வரை செல்ல செய்வோம்–என்றார்.

## நாடகம் ஆடியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அந்த நாடகத்தின் வேசம் கலைந்ததன் வெளிப்பாடே சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவைப் பகிரங்கமாக அறிவித்திருப்பதாகவும் ஈ.பீ.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் தமிழர் தரப்பு ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்பதற்காகப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் கூட்டங்கள் நடைபெற்று இறுதியில் ஐந்து கட்சிகள் இணைந்து 13 அம்சக் கோரிக்கைகளும் தயாரிக்கப்பட்டிருந்தன.

இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் பிரதான வேட்பாளர்களுடன் ஐந்து கட்சிகளும் இணைந்து பேசி இறுதி முடிவெடுப்பதாகக் கூறப்பட்டிருந்தது. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டைத் தமிழரசுக் கட்சி தன்னிச்சையாக முந்திக் கொண்டு எடுத்திருந்தது. அதன் பின்னர் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளும் அதே நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றன.

ஆனால் இந்த விடயங்கள் தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்னுக்குப்பின் முரணான மாறுபட்ட கருத்தக்களையே தெரிவித்து வருகின்றார். குறிப்பாக ஐந்து கட்சிகளினதும் 13 கோரிக்கைகள் தொடர்பாக பேசுவதாகக் கூறிய சுமந்திரன், இப்போது தான் யாருடனும் அது குறித்துப் பேசவில்லை என்று கூறுகின்றார்.

இவ்வாறான நிலையில் இன்னுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிவமோகன், தமிழரசுக் கட்சி தன்னிச்சையாக ஆதரிக்கும் முடிவை எடுக்கவில்லை என்றும் தாம் இந்த முடிவை ஏற்கனவே எடுத்திருந்ததாகவும் கூறுகின்றார்.

பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர் என்றால் ஒரு முடிவை எடுத்த பின்னர் ஏன் மீண்டும் ஒரு கலந்துரையாடலில் கலந்து கொள்ள வேண்டுமென்ற கேள்வி எழுகிறது.

தமிழரசுக் கட்சியின் இந்தச் செயற்பாடுகளையும் அவர்கள் கூறுகின்ற விடயங்களையும் பார்க்கின்றபோது இவர்கள் ஏற்கனவே ஒரு முடிவை எடுத்து விட்டுத்தான் தமிழ்க் கட்சிகள் கூட்டத்திலும் கலந்துகொண்டிருக்கின்றனர் என்பது வெளிப்படுகின்றது. ஆகமொத்தத்தில் பல்கலைக்கழக மாணவர்களை ஒரு கருவியாகப் பாவித்து அந்த மேசையில் இருந்தவர்களை முட்டாள்களாக்கி தமிழரசுக் கட்சி நாடகமொன்றை அரங்கேற்றியிருக்கின்றது.

அந்த நாடகத்தின் வேசம் கலையும் நேரத்தில் தான் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு தாம் ஆதரவளிக்கப் போவதாக பகிரங்கமாகவே அவர்கள் தெரி விக்க வேண்டிய நிலைமை வந்திருக்கின்றது. இவர்கள் எடுத்திருக்கும் இந்த முடிவுகள் என்பது தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாக இருக்கவில்லை.–என்றார். (ஐ–07)

## முதல் பிரசாரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பங்காட்சித் தலைவர்களும் இதில் கலந்துகொண்டு வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் ரெலோ கட்சி உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. (ஐ–100)

## ரெலோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் தலைமைக் குழு கடந்த 6ஆம் திகதி வவுனியாவில் ஒன்று கூடி ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது தொடர்பில் வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதன்போது 15 உறுப்பினர்களில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட 11 உறுப்பினர்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்தனர். செயலாளர் நாயகம் சிறிகாந்தா உட்பட நான்கு உறுப்பினர்கள் சஜித் பிரேமதாஸவையும் எந்தவொரு சிங்கள வேட்பாளரையும் ஆதரிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

ரெலோவின் யாழ் மாவட்ட செயற்குழு கூட்டம் நேற்று யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் 25 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். அதில் 21 உறுப்பினர்கள் தலைமைக் குழுவின் முடிவைத் தாம் நிராகரிப்பதாகத் தெரிவித்ததுடன், சிவாஜிலிங்கத்தை ஆதரிப்பதாகத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். இதற்கு நான்கு நபர்கள் மாத்திரம் எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வவுனியாவில் நடத்தப்பட்ட கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொள்ளாமை மூலம் அவர் தடுமாறிக் கொண்டிருக்கின்றார் என்பது தெரிகின்றது –என்றார். (ஐ)

## தூக்குத்தண்டனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார்.

2005ஆம் ஆண்டு ராஜகிரிய றோயல் பார்க் தொடர்மாடிக் குடியிருப்பில் தங்கியிருந்த 18 வயதான இவோன் ஜோன்சன் என்ற பெண்ணை ஜூட் ஜயமக என்பவர் கொலை செய்தார்.

இந்தக் கொலைச் சம்பவத்தை அடுத்து, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் குற்றவாளியான ஜூட் சமந்த ஜயமகவுக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஜூட் சமந்த குறித்த சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்தார்.

இதன்போது குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை போதுமானதாக இல்லை எனவும், அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படவேண்டும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்ட மா அதிபர் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

அதனைத் தொடர்ந்து குற்றவாளியின் மீண்டும் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த தூக்குத் தண்டனையை ஆட்சேபித்து, ஜூட் சமந்த ஜயமக உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மேன்முறையீட்டைப் பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என தெரிவித்து தீர்ப்பினை 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தது.

இந்த நிலையில் தூக்குத் தண்டனைக் கைதி ஜூட் சமந்த ஜயமகவை பொது மன்னிப்பில் விடுவிக்கும் உத்தரவை ஜனாபதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளார். பொது மன்னிப்பு ஆவணங்கள் தமக்குக்கிடைத்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

ஜனாதிபதி வேட்பாளா சஜித் பிரேமதாஸவை ஆதரித்து வவுனியா தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டியில் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

நாங்கள் இன்று கோருவதெல்லாம் நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடத்திய காலத்தில் கூறிய விடயங்களையே கேட்கின்றோம். உண்மைக்காகப் போராடியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்கள் போராடியது மக்களுக்காக. அவர்கள் மக்களின் உரிமைக்காகப் போராடினார்கள். எனவே மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

இந்தத் தேர்தலை நாங்கள் பகிஷ்கரிக்க முடியாது. எமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தாது எமக்குப் பாதகமாகத் தேர்தல் முடிவு அமையாமல், எமக்குச் சாத்தியமாகத் தேர்தல் முடிவு அமைய வேண்டும். நாங்கள் சகல கடமைகளையும் தெளிவாக ஆராயந்து ஒரு முடிவை எடுத்து அந்த முடிவை நடைமுறைப் படுத்த வேண்டும். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்தபோது வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. வாக்களித்திருந்தால் மஹிந்த ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது. அவர் ஜனாதிபதியாகி 10 வருடங்கள் எமது மக்கள் பட்ட துயரங்கள் நாங்கள் சொல்ல வேண்டியதில்லை.

அரசியல் ரீதியாக எம்மைப் பலவீனப்படுத்த முயன்றார்கள். இருக்கும் அதிகாரத்தைக் குறைப்பதற்கு முயற்சித்தார்கள். மனிதஉரிமைமீறல்கள், அடிப்படை உரிமை மீறல்கள் நாள்தோறும் நடைபெற்றன. எமது மக்களை மதித்து நடக்கவில்லை. ஆகவே நாங்கள் தேர்தலைப் பகிஷ்கரித்து தவறானவழிக்குச் செல்லமுடியாது.

அரசியல் தீர்வு சம்பந்தமாகவும், அதிகாரப் பகிர்வு சம்பந்தமாகவும், மக்களிடத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும், கோட்டாபயவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் கூறப்படவில்லை. அதற்கு மாறாக சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனது நிலைப்பாட்டை தெளிவாக கூறியிருக்கின்றார். அதாவது அதி உச்ச அதிகாரப் பகிர்வு.

இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட காரணத்தினால் யுத்தம் நடைபெறாத காரணத்தினால் அவை எல்லாவற்றையும் மறந்து தமிழ் மக்களை ஏமாற்றலாம் என நினைக்கின்றனர். அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது. தாங்கள் கூறிய விடயத்தையே நிறைவேற்ற விருப்பமில்லாமல் அவர்கள் இருக்கின்றனர்.

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்கள தயாரிக்கப்பட்ட விஞ்ஞாபனம். அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மறைமுகமாக சமஸ்டி ஒழிந்திருக்கின்றது. அதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்–என்றார். (ஐ–100)

காலைக்கதிர்
Kalaikathir
ஞாயிற்றுக்கிழமை 10.11.2019



## கோட்டபாய இம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாஸவை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நேற்று வவுனியாவில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் அறிக்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியது. ஜனாதிபதித் தேர்தல் எங்கள் முன் வருகின்றபோது இதற்கும் தமிழ் மக்களுக்கும் சம்பந்தம் இல்லை. இது தெற்கில் நடக்கும் ஒரு அரசியல் போட்டி. இதில் எங்களை ஈடுபடுத்த தேவையில்லை என்ற பரப்புரை தமிழ் மக்கள் மத்தியில் செய்யப்படுகிறது. இது எப்பொழுதும் செய்யப்பட்டது. ஆனால் சென்ற தேர்தலில் மக்கள் அதற்குச் செவி கொடுக்கவில்லை. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கூடுதலான வாக்குகள் கிடைத்தமையால் தான் மற்றைய பகுதிகளில் மஹிந்த கூடிய வாக்கு பெற்றபோதும் மைத்திரிபால சிறிசேன வெல்லக் கூடியதாக இருந்தது. அப்பொழுது மஹிந்த சொன்ன கருத்து, ஈழம் வாக்குகளால் நான் தோற்கடிக்கப்பட்டுள்ளேன். கேட்க மனதுக்கு குளிர்ச்சியாக இருந்தது.

நான் இவர்களைத் தோற்கடித்து விட்டேன். இனி தமிழ் தேசியம் என்ற ஒன்று கிடையாது. தமிழ் மக்களுடைய உரித்துக்கள் என்று எதுவும் கிடையாது. அதை போரிலே நான் முறியடித்து விட்டேன். அரசியல் உரித்துக்கள் என்று பிறிதாக எதுவும் இந்த நாட்டில் இல்லை. அதை போரிலே நான் முறியடித்து விட்டேன் என்று மார் தட்டிக் கொண்டு இருந்தவர், தேர்தலில் தோற்று இது ஈழத்தில் வாக்குகளால் அடைந்த தோல்வி என்பதை ஒப்புக் கொண்டார்.

நாங்கள் தெளிவான ஒரு அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருக்கின்ற ஒரு அரசியல் கட்சி. அரசியல் கட்சிகளினுடைய கூட்டமைப்பு. எங்களுடைய அரசியல் நிலைப்பாடு என்ன என்பது எங்களுக்கு தெட்டத்தெளிவாகத் தெரியும். எங்களுடைய மக்களுக்கும் தெரியும். இந்த நாட்டில் வாழும் அனைவருக்கும் தெரியும். பத்திரிகையில் கட்டுரை எழுதும் அரசியல் வித்தகர்கள் சொல்வதைப் போல் நாங்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு கொடுக்கவில்லை எனில் முடிவு என்ன?. இந்த நாட்டினுடைய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல். நாங்கள் வாக்களித்தாலோ, வாக்களிக்காமல் விட்டாலோ ஒருவர் வெல்லத்தான் போகிறார்.

தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காக எவரும் வெற்றி பெறாமல் இருக்கப் போவதில்லை. அதிலும் இரண்டு பேரில் ஒருவர் தான் வெல்லப் போகிறார். மிகுதி 32 பேருக்கும் தாங்கள் வெல்வதற்காக போட்டியிடவில்லை என்பது தெரியும். நாங்கள் வாக்களிக்காமல் விட்டால் யார் வெல்லுவார் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம். அப்ப இந்த கட்டுரையாளர்கள் எல்லாம் எதை விரும்புகிறார்கள். யார் வெல்ல வேண்டும் என்று விரும்புகிறார்கள். எங்களுக்கு வாரவாரம் இலவசமாக ஆலோசனை சொல்லிக் கொண்டு இருப்பவர்கள். அவர்களுக்கு இது தெரியாதா? ஆகவே அந்த வெற்றிக்காக தானா இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தெரிவு ஒன்று தான் உள்ளது. வேறு தெரிவு இல்லை. எங்களுடைய விருப்பங்கள் எல்லாம் ஏராளம் இருக்கின்றன. அது வேறு விடயம். எங்களுடைய விருப்புக்காக வாக்களிப்பதற்கு அங்கு தெரிவு இல்லை. வாக்களிக்காமல் விட்டால் கோட்டபாய வெல்லுவதை எவரும் தடுக்க முடியாது. வாக்களித்தாலும் அவர் வெல்லுவதை தவிர்க்க முடியுமா என்ற ஒரு கேள்விக்குறி இருக்கிறது. தமிழ் மக்கள் அனைவருமே சென்று வாக்களித்தால் அதை தடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

2005 ஆம் ஆண்டிலே நாங்கள் ஒரு பாடத்தைப் படித்தோம். சமஸ்டி அடிப்படையிலான ஆட்சி, அதிகாரப் பகிர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இதுதான் எங்களுடைய சிந்தனை. இதில் மாற்றம் இல்லை. 2005 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக சமஸ்டி என்று போட்டுத் தேர்தலில் போட்டியிட்டார். இன்று சமஸ்டி என நான் எவருடனும் பேசவில்லை என சஜித் பிரேமதாஸ சொல்கிறார். ஏனென்றால் சமஸ்டி பற்றிப் பேசினேன் என்றாலே தோற்று விடுவேன் என்ற பயம். அன்றைக்கு ரணில் சொல்லி போடியிட்டதால் தேற்றார். ஏன் நாங்கள் வாக்களிக்கவில்லை.

2000 ஆம் ஆண்டு ஓகஸ்டில் சந்திரிகா அம்மையார் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தார். அதில் ஒற்றையாட்சியை முற்றாகத் தவிர்த்து சமஸ்டி என்று சொல்லாவிட்டாலும் முழுக்க முழுக்க சமஸ்டி அப்படையிலான திட்டம். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. 2000 ஆம் ஆண்டிலும், 2005 ஆம் ஆண்டிலும் எங்களுக்குச் சரியான தீர்மானமோ அல்லது பிழையான தீர்மானமோ ஆனால் ஒரு மாற்று வழி கையில் இருந்தது. கையில் ஆயுதம் இருந்தது. அந்த நேரத்தில் அப்படியொரு தீர்மானத்தை எடுத்தோம். அது சரியாக இருக்கலாம். அல்லது பிழையாக இருக்கலாம்.

இன்று எமது கையில் என்ன மாற்று வழி இருக்கிறது. வேறு ஒரு மாற்று வழியும் இல்லாத நேரத்தில் எங்களுடைய கையில் இருக்கிற பலமான வாக்கு என்கிற ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று சொல்கிறார்கள். எங்களுடைய வாக்கு தான் சென்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியாளனை நிர்ணயித்தது. அப்படியான பலமான ஆயுதத்தை கையில் வைத்துக் கொண்டு அதை பாவிக்கக் கூடாது என்கிறார்கள். அப்ப எதைப் பாவிப்பது?. இது எதையும் அடைவதற்கான ஒரு ஆயுதமும் அல்ல. இது ஒரு கேடயம். வாள் அல்ல. எங்களை நோக்கி வீசப்படும் ஈட்டிகளை தடுப்பதற்கான ஆயுதம். எங்களை பாதுகாப்பதற்கான ஆயுதம். முதலில் அது தான் தேவை. எங்களுடைய இருப்புக்களை நாங்கள் முதலில் பிடித்து வைத்திருக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டிலும் அதைத் தான் நாங்கள் செய்தோம். ஆனால் முன்னேறினோம். நான்கு வருடத்தில் ஒன்றும் நடக்கவில்லை என்று கூறுவதெல்லாம் அப்பட்டமான பொய். இது மக்களுக்கு நன்றாகவே தெரியும். ஊடகவியலாளருக்கு இன்னும் கூடுதலாக தெரியும். முன்னர் செய்தி எழுதுவதற்கு முன்னரே அவர்கள் சொந்த தணிக்கையில் ஈடுபட்டவர்கள். 5 வருடத்தில் அது மறந்து போச்சோ தெரியவில்லை. இப்படி எழுதினால் அவர்களுக்கு கோபம் வந்து விடுமோ என பயந்தவர்கள் இன்றைக்கு எங்களுக்கு ஆலோசனை சொல்கிறார்கள். அந்த சுதந்திரம் ஏற்பட்டதா இல்லையா. சிலர் முன்னர் நடந்ததை மறந்து விட்டார்கள். கடந்த வருடம் இதே காலப்பகுதியில் இடம்பெற்ற 52 நாட்கள் அதை மீள ஞாபகப்படுத்தியிருந்தது. அந்த நிலை தான் மீண்டும் வேண்டுமா?

18 ஆவது அரசியல் தீர்திருத்தத்தை மஹிந்த கொண்டுவந்தது எதற்காக? இந்த நாட்டில் தங்களுடைய குடும்பத்தை தவிர யாரும் ஆட்சியில் இருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே கொண்டு வந்தனர். தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காக தான். 25 வருடம் ஆட்சி செய்ய வேண்டும். வாழ் முழுவதும் ஆட்சி செய்ய வேண்டும் என்று யோசித்தார்கள். அந்த மாற்றத்தை நாங்கள் ஏற்படுத்தியிருக்கவிட்டால் இன்றைக்கு நிலமை என்ன?. அந்த மாற்றத்தை ஏற்படுத்தியதில் முக்கிய பங்கு வகித்தவர்கள் நாங்கள். முழு நாடும் தமிழ் மக்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

2015 இலும், 2018 ஒக்டோபரிலும் ஜனநாயகத்தைப் பாதுகாத்தோம். இன்றைக்கு சில அறிஞர்கள் அவற்றை குறித்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். 2015 ஆம் ஆண்டு தோல்வியடைந்தவர்கள் எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என பின் கதவால் 2018 ஒக்டோபரில் ஒரு திருட்டு முயற்சி செய்தார்கள். அதுவும் பலனளிக்கவில்லை. இப்பொழுது இன்னொரு சந்தர்ப்பம் வந்துள்ளது. இதில் அவர்கள் வெற்றிபெறுவார்களாக இருந்தால் இந்த நாட்டில் தேர்தல் என்ற ஒன்றே பிறகு நடக்காது. பேரப்பிள்ளைகளுக்கு, முன்னர் இந்த நாட்டில் தேர்தல் ஒன்று இருந்தது என்று கதை தான் சொல்ல வேண்டி வரும். பிறகு தேர்தல் நடக்காது. இரண்டு தடவை தவற விட்டு விட்டோம். இந்த முறை விடக்கூடாது என மஹிந்த அணியினர் இருக்கின்றனர். இந்த முறை பிழை விடாது தேர்தலில் வென்று விட வேண்டும். வென்று விட்டால் அந்த கதிரையை விட்டு இனி அசைவதில்லை என்று தீர்மானித்து விட்டார்கள்.

சஜித் பிரேமதாஸ தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல விடயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லுவது எல்லாவற்றையும் செய்வார் என்ற எதிர்பார்ப்பு எங்களிடம் இல்லை. ஆனால் குறைந்தது அதை சொல்வதற்காக துணிவாவது இருந்திருக்கிறது. இது ஒரு பல்லினத்துவ நாடு. பல சமயங்கள் இருக்கிறது. பல மொழி பேசுகின்ற மக்கள் வாழுகிற நாடு. அந்த பல்லினத் தன்மையை நான் பாதுகாப்பேன். மற்றவர் எதுவுமே சொல்லவில்லை. அதி உச்ச அதிகாரப் பகிர்வை நான் செய்வேன் எனச் சொல்லியிருக்கிறார். புதிய அரசமைப்பு முயற்சியை நிறைவேற்றுவேன் என்று சொல்லியிருக்கிறார். பௌத்தத்திற்கு முதலிடம் கொடுத்த போதும் சகல சமயங்களும் பாகுபாடு இல்லாமல் நடத்தப்படும் என்று சொல்லப்படுகிறது. அதை சொல்லியாவது இருக்கிறது. அதற்கு மக்களுடைய ஆணை இருக்க வேண்டும். பின்னர் அதை நாம் பேசமுடியும். எனவே நாம் சஜித் பிரேதமதாஸவுக்கே வாக்களிக்கவேண்டும் – என்றார். (ஐ)

## ரெலோவுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிலதினங்களின் முன்னர் ரெலோவின் தலைமைக் குழு கூடி, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென முடிவெடுத்துள்ள நிலையில், யாழ்.மாவட்டக் கிளையின் இந்தத் தீர்மானம் கட்சிக்குள் பெரும் பரபரப்பையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

ரெலோ செயலாளர் நாயகம் என். சிறிகாந்தா தலைமையிலான குழுவே ரெலோவின் தலைமைக்குழு எடுத்த தீர்மானம் தவறானது எனக் குறிப்பிட்டிருக்கின்றது.

ரெலோவின் யாழ். மாவட்டக் கிளைக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கட்சியின் செயலாளர் என். சிறிகாந்தா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள் விந்தன் கனகரட்ணம், சபா.குகதாஸ் மற்றும் யாழ் மாவட்ட முக்கியஸ்தர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

நேற்றைய கூட்டத்துக்கு முழுமையான அழைப்பு விடுக்கப்படவில்லையெனக் கூறப்படுகின்றது. சுமார் 65 யாழ் மாவட்டக்குழுவில் அங்கம் வகிக்கின்றபோதும் சுமார் அரைப்பங்கினரே அதில் பங்கேற்றனர்.

கூட்டத்தின்போது, யாழ் மாவட்டக் கிளைப் பொறுப்பாளரான சில்வெஸ்டர், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தலைமைக்குழுவின் முடிவு தவறானது. இந்த தீர்மானத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாகப் பொதுக்குழுவைக் கூட்ட முடியாது–என்றார்.

இதையடுத்து, ஏனைய பல உறுப்பினர்கள் இந்தக் கருத்தை ஆதரித்தனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் முன்னாள் விந்தன் கனகரட்ணம், வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஸ், நிர்மலநாதன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதரன் உள்ளிட்டவர்கள் இந்தக் கருத்தைக் கடுமையாக எதிர்த்தனர். கட்சி எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றனர். கட்சிக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் தத்தமது இஸ்டத்துக்கு முடிவுகளை எடுக்க முடியாது. ஏனைய கட்சிகள் எவ்வளவு கட்டுப்பாடாக இருக்கிறார்கள், ரெலோ யாழ். மாவட்டக்கிளைதான் கட்டுப்பாடின்றிச் செயற்படுகிறது என்றனர்.

எனினும், கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலானவர்கள் இதை ஏற்கவில்லை.

ரெலோவில் அண்மைக் காலத்தில் இணைந்து சிறிகாந்தாவுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வரும் இளம் ரெலோ உறுப்பினர்களே, சிவாஜி ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருந்தனர்.

இந்த விவாதங்கள் முடிவற்று நீண்டதால் அதிருப்தியடைந்த ரெலோவின் முன்னாள் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திலீப், மத்திய குழு உறுப்பினர் ரெமி ஆகியோர் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கட்சியின் செயலாளர் என். சிறிகாந்தா, தலைமைக் குழுவின் முடிவை விமர்சனம் செய்தார். இந்த முடிவின் பின்னால் சில டீல்கள் இருந்ததாகவும், அவை பற்றி இப்போது பேசவில்லையென்றும் தெரிவித்தார். தலைமைக் குழுவுக்குள் தகுதியற்றவர்கள் சிலர் வருவதற்கு தான் கதவைத் திறந்துவிட்டு தவறிழைத்துவிட்டேன் என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து சில உறுப்பினர்கள் தாம் சிவாஜிலிங்கத்தை ஆதரிக்கப் போவதாகக் கையை உயர்த்தினர். வாக்கெடுப்பு நடத்தி சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேறியது.

இந்தக் கூட்டத்துக்கு யாழ் மாவட்டக் குழு அங்கத்தவர்களுக்கு முழுமையாக அழைப்பு விடுக்கப்படவில்லையென்றும், நீண்ட காலத்தின் பின்னர் சிலர் கூட்டி வரப்பட்டனர் எனவும் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நடந்த வாக்கெடுப்பில் சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாக 23 பேர் வாக்களித்தனர். யாழ் மாவட்ட உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், வலி கிழக்கு தவிசாளர் தியாகராசா நிரோஸ், நிர்மலநாதன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதரன் உள்ளிட்ட 5 பேர் அதை எதிர்த்தனர். 4 பேர் நடுநிலை வகித்தனர்.

இதேவேளை, ரெலோவின் நேற்றைய கலந்துரையாடல் நடைபெற்ற யாழ்.மாவட்ட அலுவலகத்தின் உள்ளேயும் வெளியிலும் சிவாஜிலிங்கத்தின் தேர்தல் பிரசார ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தன. (ஐ–07)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வில்லை என வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சி தொடர்பில் பல கருத்துக்களை வெளியாவது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துக்களைப் பகிரும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதி தேர்தலில் தமிழக்கடசிகளை ஒன்றிணைத்து பொதுக் கோரிக்கையை முன்வைக்க எடுத்த முயற்சி தோல்வியடைந்துவிட்டதாகச் சிலர் கூறுகின்றனர். என்னுடைய பார்வையில் அந்த முயற்சி தோல்வியடையவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்குள் வரவேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் முயற்சி எடுத்தனர்.

அதில் கலந்து கொண்ட தேசியம் சார்ந்த ஆறு கட்சிகளும் இணைந்து 13 அம்சக் கோரிக்கைகளை உருவாக்கியிருந்தோம். எனினும் துரதிஷ்டமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 14 ஆவது கோரிக்கையாக இடைக்கால வரைவை நிராகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கொண்டு வந்தது.

இந்நிலையிலேயே அவர்கள் கூட்டிலிருந்து வெளியேறினர். எனினும் ஐந்து தமிழ்க் கட்சிகளும் கையொப்பம் இட்ட கோரிக்கைகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்றிருந்தது. எனவே இதனை ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டு என்பதை விட ஆறு தமிழ்க்கடசிகளும் இணைந்தே கோரிக்கையை தயாரித்தது எனலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை முதல் முறையாக தேசியத்தை வலியுறுத்தும் ஆறு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கோரிக்கைகளை ஆவணப்படுத்தியுள்ளமை வரலாற்றுப் பதிவு என்றே நான் கருதுகின்றேன். ஆகவே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சி வெற்றியென்றே கூறவேண்டும்.

மாணவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளும் தொடர்ந்து வலுவாகவே இருக்கும். இந்த கோரிக்கைகளை முழுமையாகவோ பகுதியாகவோ அரசியல் கடசிகள் பின்தொடரலாம். அவற்றைச் செயற்படுத்தலாம். அதில் உள்ள அனைத்தையும் நிறைவேற்றாது போனாலும் பலவற்றை நிறைவேற்றலாம். ஆகவே இது தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் முக்கிய ஆவணமாகவே இருக்கின்றது – என்றார். (ஐ–07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## செவிமடுக்கச் செய்யும் வழி

ஈழத் தமிழரைப் பொறுத்த வரையில் இது மிகவும் துரதிஷ்டகரமான நிலைமை.

எழுபது வருடங்களுக்கு மேல் தீர்க்கப்படாமல் நீடிக்கும் பெரும் போரழிவுகளையும் பேரழிவுகளையும் தந்த – அவர்களின் தேசிய இனப் பிரச்சினையைச் சீண்டுவார் எவரும் இல்லை என்ற பேரவலம் இன்று.

தலைவர் பிரபாகரனின் துப்பாக்கிகள் பேரொலியோடு கனன்று கொண்டிருந்தபோது, தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை சர்வதேசத்தின் காதுகளிலும் வலிமையாக – சத்தமாக – எட்டியது. அதனால் அந்தப் பிரச்சினையின் பால் அதீத ஈடுபாடு காட்டியது சர்வதேசம். அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு எல்லை கடந்து தலையிட்டு முயற்சித்தது அது.

உதவும் நாடுகள், இணைத் தலைமை நாடுகள், அயலக தேசம், சர்வதேச மனித உரிமைக் கட்டமைப்புகள் என்று எல்லாம் வந்தன; தலையிட்டன.

தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்து நின்ற சர்வதேசம் 'பயங்கரவாதம்' முடிவு கட்டப்பட்டால் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான – நீதியான – நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய – தீர்வு எட்டப்படும் என வேதம் ஓதியது. அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்தின் கருத்து வெளிப்பாடு அப்போது அப்படித்தான் எதிரொலித்தது.

பிரபாகரனின் துப்பாக்கிகளின் முழக்கம் இப்போது ஓய்ந்து விட்டது. சுடுகலன்களும், பீரங்கிகளும் அடங்கி விட்டன.

யுத்தத்தின் சத்தம் அடங்கியதோடு, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சர்வதேசத்தின் காதுகளில் கேட்பதும் கூட அடங்கிவிட்டது போலும்.

பிரபாகரனின் சுடுகலன்கள் முழங்கியபோது ஓடியாடி தீர்வுக்கு முயன்ற சர்வதேச தரப்புகள் யுத்தத்தின் சத்தம் ஓய்ந்ததும் தாங்களும் கூட அடங்கி விட்டனபோலும். தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சீண்டுவார் – சீந்துவார் – இன்றி கவனிக்கப்படாமல் கிடக்கின்றது.

சர்வதேச மட்டத்தில்தான் இந்த நிலைமை என்றில்லை. பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகள் மட்டத்திலும் கூட இதுதான் நிலைமை.

தலைவர் பிரபாகரனின் அணிகள் கட்டுநாயக்கா வரை ஊடுருவி துவம்சம் செய்தபோது, சர்வதேச தரப்புகளின் பின்னால் போய் அடைக்கலம் புகுந்தபடி, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வை வழங்கத் தயார் என்று சர்வதேச மட்டத்தில் பகிரங்க அறிவிப்பு விடுத்த தென்னிலங்கைச் சிங்களம், இன்று தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து பகிரங்கமாகப் பேசக் கூடத் தயாரில்லை என்று புறமுதுகு காட்டி நிற்கின்றது.

தமிழர்களின் ஐந்து கட்சிகள் முன்வைத்த – தமிழர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்ற – 13 அம்சக் கோரிக்கைகள் குறித்துப் பரிசீலிக்கவே தயாரில்லை என்று தென்னிலங்கைச் சிங்களம் இறுமாப்புடன் கூறியதும் கூட இந்தப் பின்னணிதான்.

நாட்டில் இப்போது ஜனாதிபதித் தேர்தல் காலம். தமிழர்களின் வாக்குகள் பற்றிச் சிந்திக்காமல் வழக்கம் போல தென்னிலங்கை பௌத்த, சிங்கள வாக்குகளை மட்டும் நம்பி அரசியல் பிழைப்பு நடத்தும் பொதுஜனப் பெரமுன போன்ற கட்சிகள் தமிழரின் நீதி, நியாயமான அபிலாஷைகளைக் கவனிக்காமல், புறந்தள்ளி, உதாசீனப்படுத்தி நடக்கின்றமையை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

ஆனால், இந்தத் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளையும் நம்பி நிற்கும் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கூடத் தீர்வு குறித்துப் பேச – உச்சரிக்க – அஞ்சுகின்றார். தமது தேர்தல் பிரசாரத்துக்காக – தமிழர்களின் வாக்குகளைத் திரட்டுவதற்காக – தமிழர்களின் தாயக மூளை மையமான யாழ்ப்பாணத்துக்கும், வடக்கின் ஏனைய பிரதேசங்களுக்கும் வருகை தந்த அவர், தமிழர் தேசத்தின் பற்றி எரியும் பிரச்சினையாக இருக்கும் தேசிய இனப்பிரச்சினை விடயம் குறித்தோ அதற்கான தீர்வு குறித்தோ இங்கு மூச்சே விடவில்லை.

தமக்கு வாக்களிப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் ஏதும் இல்லை என்று கருதி அவர் அப்படி அலட்சியமாக – தமிழர்களின் ஆன்மாவுடன் ஒன்றிக் கலந்திருக்கும் அவர்களின் தேசிய இனப்பிரச்சினை குறித்துப் பேசாமல் விட்டேத்தித்தனமாக – நடந்திருக்கக் கூடும்.

2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தின் கட்சியின் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் – இப்போதைய கட்சித் தலைவர் – ரணில் விக்கிரமசிங்கவும் இதேபோன்று தான், தமக்கு வாக்களிப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் – வழி – கிடையாது என்று எண்ணிச் செயற்பட்டமையால்தான், தமது அரசியல் வாழ்க்கைக் காலத்தில் நாட்டின் தலைமைப் பதவிக்கே வரவே முடியாது என்ற மிகக் காட்டமான பாடத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து படிக்க வேண்டியவரானார். அதை சஜித்துக்கு நினைவூட்டுவது வரலாற்றுக் கடமையாகின்றது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்துப் பேச தென்னிலங்கை இப்போது தயாரில்லை என்ற செய்தி தமிழருக்கு ஒரு விடயத்தை உணர்த்துகின்றது. தாம் கற்றுக் கொண்ட பட்டறிவில் இருந்து அதனைப் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் தமிழர்கள். அந்தப் புரிதல் விபரீதத்துக்குத்தான் வழிகாட்டும் என்பது வேறுவிடயம்.

# ராணுவ அழுத்தத்தால் சட்டத்தரணி குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாவதற்கு தடை

யாழ்ப்பாணம், நவ. 10

பொதுநல வழக்குகள் பலவற்றை பாதிக்கப்பட்ட தரப்புகள் சார்பில் முன்னெடுத்து வருபவரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவருமான கலாநிதி குமாரவடிவேல் குருபரனை நீதிமன்றங்களில் முன்னிலையாவதை தடை செய்யுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பணித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் அழுத்தத்தின் பின்னணியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்தப் பணிப்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசுவாமிக்கு வழங்கியுள்ளது.

இந்த அறிவுறுத்தல் கடந்த செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும் கடந்த மாதம் 15ஆம் திகதியே அவருக்குக் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், பொதுநலம் சார்ந்த வழக்குகளில் 2011ஆம் ஆண்டு முதல் உயர் நீதிமன்றம், மேல் நீதிமன்றங்கள் உட்பட அனைத்து நீதிமன்றங்களிலும் முன்னிலையாகி வருகின்றார். பாதிக்கப்பட்ட பலருக்கு நீதியையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இந்த நிலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர் என்று பெற்றோரால் தெரிவிக்கப்படும் இளைஞர்கள் 12 பேர் தொடர்பில் 2017ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு எழுத்தாணை மனுக்கள் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை சட்டத்தரணி எஸ்.சுபாசினி தாக்கல் செய்தார்.

அந்த மனுக்களின் ஊடாகப் பாதிக்கப்பட்ட பெற்றோருக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்னிலையாகி வாதாடி வருகிறார்.

1996ஆம் ஆண்டு நாவற்குழி படைமுகாமில் இராணுவ அதிகாரியாகவிருந்த துமிந்த கெப்பிட்டிவெலான தலைமையிலான படையினர் கைது செய்து கொண்டு சென்ற 24 இளைஞர்களை பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் சட்டத்தரணிகள் எஸ்.சுபாசினி ஆகியோர் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த நவம்பர் 9ஆம் திகதி 12 பேர் சார்பில் தனித்தனியே ஆள்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 3 மனுக்களை மட்டும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று ஏற்றுக்கொண்டது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட 3 பேரின் ஆள்கொணர்வு மனுக்களில் மனுக்களில் முதலாவது பிரதிவாதியாக இளைஞர்களைக் கைது செய்து சென்றபோது நாவற்குழி முகாமின் அதிகாரியாகவும் தற்போது இலங்கை இராணுவத்தின் காலாட் படையணியின் பணிப்பாளராகவும் செயற்படும் துமிந்த கெப்பிட்டிவெலான சேர்க்கப்பட்டுள்ளார். 2ஆம் பிரதிவாதியாக இலங்கை இராணுவத் தளபதி மற்றும் 3ஆம் பிரதிவாதியாக சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதில் சட்ட மா அதிபர் திணைக்களம் முன்வைத்த விண்ணப்பத்தையடுத்து முதலாவது பிரதிவாதி துமிந்த கெப்பிட்டிவெலான சார்பில் பிரதி செலிசிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர முன்னிலையாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

இந்த மனுக்கள் தொடர்பான ஆரம்ப விசாரணை சுமார் இரண்டு வருடங்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்ற நிலையில் கடந்த மே 10ஆம் திகதி இடைக்காலக் கட்டளையிடப்பட்டது.

மனுதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து மேல் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் படி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றுக்கு பொறுப்பு பாரப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இந்த மனுக்கள் மீதான விசாரணை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போது, பாதிக்கப்பட்ட தரப்பான மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்னிலையாகியிருந்தார். எதிர்மனுதாரர்கள் சார்பில் பிரதி செலிசிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர முன்னிலையானார்.

மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவடைந்து மன்றிலிருந்து சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் வெளியேறியபோது அவரை, இராணுவப் புலனாய்வாளர் ஒருவர் அலைபேசியில் ஒளிப்படமோ அல்லது காணொலிப் பதிவோ செய்திருந்தார். அந்த இராணுவப் புலனாய்வாளர் பிரதி செலிசிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகரவின் வாகனத்தில் ஏறியிருந்து ஒளிப்படம் எடுத்ததையும் அதில் பயணித்தமையையும் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் கண்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாக சாவகச்சேரி நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்த சட்டத்தரணி கு.குருபரன், சட்ட மா அதிபர் உள்ளிட்ட தரப்புகளுக்குக் கடிதம் ஊடாகவும் முறையிட்டிருந்தார்.

தங்களால் முன்வைக்கப்பட்ட விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதுதொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சட்ட மா அதிபரால் சட்டத்தரணி கலாநிதி கு.குருபரனுக்கு பதிலளிக்கப்பட்டும் இருந்தது.

இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், போதனைசார் அலுவலகராக உள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கும் அனுமதி உண்டா? அவர் இராணுவத்தினருக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்னிலையாகின்றார் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதம் கிடைத்த அன்றைய தினமே (ஓகஸ்ட் 21) அவசர அவசரமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரிக்கு ஓர் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

அதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், போதனைசார் அலுவலகராக உள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கும் அனுமதி பெற்றுள்ளாரா என்பது தொடர்பில் இலங்கை இராணுவத்தால் கோரப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்கவேண்டும் என்று தகுதிவாய்ந்த அதிகாரியிடம் கோரப்பட்டது.

பல்கலைக்கழக ஸ்தாபன விதிக் கோவை 8ஆம் பிரிவின் கீழ் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவையால் 2011ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தகுதி வாய்ந்த அதிகாரியால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பதிலளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரியின் பதில் கடிதம் மற்றும் இலங்கை இராணுவத்தால் வழங்கப்பட்ட கடிதம் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடந்த செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிய அமர்வில் முன்வைக்கப்பட்டன.

அவை தொடர்பில் நடவடிக்கை எடுத்து கலாநிதி குமாரவடிவேல் குருபரனை நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதைத் தடை செய்வது என்றும் அவர் பிரசித்த நொத்தாரிசுப் பணியை முன்னெடுக்க அனுமதியளிப்பது என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் கடந்த செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி நிகழ்ச்சிக் குறிப்பிடப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரிக்கு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்தக் கடிதம் கடந்த ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதுதொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேரவைக்கு அறிவிக்கும் பத்திரம் தகுதி வாய்ந்த அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்டது. பல்கலைக்கழகப் பேரவைக்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் கலாநிதி கு.குருபரனுக்கும் அறியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பில் சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரனை தொடர்புகொண்டபோது, தகவல்களுக்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. எனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கை தொடர்பில் சட்ட நடவடிக்கைக்கான முன்னெடுப்புகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதால் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று பதிலளித்தார்.

(ஐ)




**நாளை**
11.11.2019
திங்கட்கிழமை
நட்சத்திரம்: அச்சுவினி மு.இ 8.43 வரை
திதி : சதுர்த்தசி மு.இ 7.02 வரை
இராகுகாலம் : 7.36 – 9.06
சுப நேரம் : 12.06 – 1.36

# இலங்கை அரசியலை இந்தியா உன்னிப்புடன் அவதானிக்கிறது

## எக்கொனமிக் ரைம்ஸ் தகவல்

புதுடில்லி, நவ. 10

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும், 8 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில், அண்டை நாடான இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள் குறித்து இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளியாகும் எக்கொனமிக் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை தனது நாட்டில் எந்தவொரு சீன இராணுவ சொத்துக்களையும், அதன் பிராந்தியத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்களையும் அனுமதிக்காது என்பது உள்ளிட்ட தனது மூலோபாய நலன்களைக் கொழும்பு பாதுகாக்கவேண்டும் என்றும் இந்தியா விரும்புவதாக எகொனமிக் ரைம்ஸ் அறிகிறது.

சீன நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொழும்பில் தரித்து நிற்க அனுமதித்ததன் மூலம், மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவை எரிச்சலூட்டியிருந்தார். அதைத் தொடர்ந்து இந்த விவகாரம் மிக உயர்ந்த மட்டத்தில் எழுப்பப்பட்டது.

இராணுவச் சொத்துக்கள் தவிர, இலங்கையில் எந்தவொரு வெளிச்சக்தியும் உருவாக்கக் கூடிய மூலோபாய நிறுவல்கள் குறித்து இந்தியாவுக்குக் கரிசனைகள் உள்ளன.

இலங்கையின் நலன்கள் குறித்து இந்தியா உணர்ந்திருக்கும் அதேவேளை, அங்கு அதிகாரத்திற்கு வரும் எந்தவோர் அரசுடனும் இணைந்து செயல்படும். கொழும்பின் எந்தவொரு புதிய மாற்றமும், பிராந்தியத்தில் இந்தியாவின் நலன்களைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும் என்று இந்த விடயம் பற்றி அறிந்த ஒருவர் கூறினார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், இலங்கையில் சீனாவின் மூலோபாய நகர்வுகள் இந்தியாவினால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டன.

பின்னர், சிறிசேன அரசின் கீழ் இந்தியா தனது மூலோபாய நலன்களைப் பாதுகாக்க முயற்சிகளை மேற்கொண்டது.

இலங்கையில் வளர்ந்து வரும் பயங்கரவாத வலையமைப்பு மற்றும் தமிழ்நாடு , உலகெங்கிலும் உள்ள அதன் தொடர்புகள் குறித்து இந்தியா எச்சரிக்கையாக உள்ளது. என்றும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரமுனவின் பிரசாரக் கூட்டத்துக்கு சென்று திரும்பிய பெண் வன்புணர்வு

## ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, நவ. 10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்ற சிறப்புத் தேவையுடைய பெண் ஒருவரை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்து கேகாலையில் கடந்த வியாழக்கிழமை தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்ற தாய் மற்றும் மகள் ஆகியோர் கடந்த வியாழன் இரவு 11 மணிவரை வீடு திரும்பவில்லை.

அதனால் தனது மனைவியையும் மகளையும் தேடி குடும்பத்தலைவர் சென்றபோது மகள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு பஸ்ஸில் வீடு திரும்பியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தையார் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் ஹேமத்தகமவைச்சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பாதிக்கப்பட்ட பெண் சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# புதிய அரசில் தமிழ்க் கூட்டமைப்பும் அமைச்சுப் பதவியை ஏற்கவேண்டும்

## அமைச்சர் மனோ கணேசன் அழைப்பு




மன்னார், நவ. 10

சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள புதிய அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்ளவேண்டும். நீங்கள் அரசை உருவாக்கிவிட்டு வெளியில் இருந்து பார்த்துக் கொள்ளக்கூடாது. நீங்கள் உருவாக்கிய ஜனாதிபதி, அரசில் அனைத்து வரப்பிரசாங்கள், நன்மைகள், அபிவிருத்தி, அதிகாரப்பரவலாக்கல் அனைத்தையும் பெற தமிழர்களுக்கும் உரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார் அமைச்சர் மனோ கணேசன்.

மன்னாரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் சஜித் பிரேமதாஸவைப் போராடி ஜனாதிபதி வேட்பாளராக கொண்டு வந்தபோது, எமது எதிரணியினர் சஜித்தைச் சிறு குழந்தையாக, பையனாக நினைத்தனர். இன்று அந்தப் பையன் கடலிலே விழுந்து காணாமல் போய்விடுமென ராஜபக்ஷ குடும்பம், அண்ணன் தம்பி, மகன் சேர்ந்திருந்து கனவு கண்டார்கள். இன்று அந்த பையன் நாடு முழுவதும் ஓடித்திரிந்து 10 கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

அந்தப் பையன் இந்து மக்கள், இஸ்லாம் மக்கள், பௌத்த மக்கள், கிறிஸ்தவ மக்கள், தமிழ் மக்கள், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் என அனைவரையும் இலங்கையர்களாக அணி திரட்டுவதைக் கண்டு ராஜபக்ஷ குடும்பம் அதிர்ச்சியடைந்துள்ளது. அந்த அதிர்ச்சியில் திறந்த வாயை மூட முடியாமல் இருக்கிறார்கள். திறந்த வாய் அப்படியே இருக்கிறது. வாய்க்குள் ஈ ஓடுகிறது.

ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் மக்கள் தன்னை இலகுவாகத் தொடர்புகொள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும், ஜனாதிபதி செயலகப் பிரிவொன்றை சஜித் அமைக்கவுள்ளார்.

வடக்கு – கிழக்கில் காணி விவகாரம் பெரிய பிரச்சினையாக உள்ளது. பாதுகாப்பு தரப்பு, வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களத்தால் எடுக்கப்பட்ட காணிகளைத் திருப்பி தருவேன் என விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கைதிகள் விடுதலையையும் விஞ்ஞாபனத்தில் சொல்லியுள்ளார். சில நாள்களின் முன்னர் கோட்டா யாழ்ப்பாணம் வந்தார். தமிழில், எல்லா அரசியல் கைதிகளையும் விடுவிப்பேன் எனச் சொன்னவர், கொழும்பு போய் அப்படி சொல்லவில்லையென மறுத்துவிட்டார். சஜித் தமிழில் ஒன்று, சிங்களத்தில் ஒன்று, ஆங்கிலத் தில் ஒன்று என்ற பேச்சுக்கு இடமில்லை.

சில மாதங்களின் முன் கொழும்பில் தேவதாஸ் என்ற அரசியல்கைதியைச் சென்று சந்தித்தேன். உடனடியாக அமைச்சரவையில் பத்திரமொன்றும் சமர்ப்பித்தேன். எனினும், உடனடியாகத் தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட காரணத்தினால் அது நடக்கவில்லை. தேர்தலில் சஜித் வெற்றிபெற்று ஜனாதிபதியானதும், சஜித்தின் அமைச்சரவையில் நான் இருப்பேன். அப்போது, முதல் மாதத்திலேயே, முதலாவது பத்திரமாக தமிழ் அரசியல்கைதிகள் விடுதலை தொடர்பான பத்திரத்தைச் சமர்ப்பிப்பேன்.

தமிழ் கைதிகளை எப்படி விடுவிப்பீர்கள் என ராஜபக்ஷாக்கள் யாரும் கேட்டாரானால், நான் பிறகு வைத்து – பார்த்துக் கொள்வேன். கோட்டாபய தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாகச் சொன்னமை எனது கையடக்கத் தொலைபேசியில் காணொளியாக உள்ளது. ருவிட்டரில் உள்ளது. அவராலும் அதை எதிர்க்க முடியாது.

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை தரவும் சஜித் தயாராக உள்ளார். ரணசிங்க பிரேமதாஸ காலத்தில் நடந்த அதிகாரப் பகிர்வுப் பேச்சு, சந்திரிகாவின் தீர்வுப் பொதி, மஹிந்தவின் சர்வகட்சிக் கூட்ட விவகாரங்களின் அடிப்படையில் அது வரும்.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நண்பர்களுக்கு மகிழ்ச்சியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அரசை உருவாக்கிவிட்டு வெளியில் இருந்து பார்த்துக் கொள்ளக்கூடாது. நீங்கள் உருவாக்கிய ஜனாதிபதி, அரசில் அனைத்து வரப்பிரசங்கள், நன்மைகள், அபிவிருத்தி, அதிகாரப்பரவலாக்கல் அனைத்தையும் பெற தமிழர்களுக்கும் உரித்துள்ளது.

கூட்டமைப்பு தேர்தலின் பின்னர் சஜித் அரசில் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ள நல்லெண்ணத்தில் அழைப்பு விடுகிறேன். அதைக் கூட்டமைப்புத்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல், அபிவிருத்தி தேவை. கிராமங்கள் அபிவிருத்தியடைய வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு தமிழ் மக்களுக்குத் தேவை.

நாங்கள் அரசை உருவாக்கி விட்டு, ஜனாதிபதியை தெரிவு செய்து விட்டு நாங்கள் வெளியிலிருந்து வேடிக்கை பார்க்க முடியாது. – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.10

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம், ஒரு பகுதி, உதயபுரம், மணியம்தோட்டம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும்––

**வவுனியா பிரதேசத்தில் -**

உளுக்குளம், மறக்கறம்பளை கணேசபுரம் பிரதேசம், செட்டிக்குளம் நகர பிரதேசம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# றொறன்ரோவைக் கொழும்புடன் இணைக்கும் புதிய விமான சேவை

கொழும்பு, நவ. 10

கனடாவின் றொறன்ரோவுக்கான விமான சேவைதொடர்பாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம், இந்தியன் எயார் லைன்ஸ் ஆகியவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன்படி கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புதுடில்லி இந்திரா காந்தி விமான நிலையத்துக்குச் சென்று அங்கிருந்து றொறன்ரோவின், லெஸ்டர் பி. பியர்சன் சர்வதேச விமான நிலையத்துக்குப் பயணம் மேற்கொள்ளமுடியும். மீண்டும் றொறன்ரோவிலிருந்து இந்தியா வழியாக, இலங்கையை வந்தடையலாம்.

வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் இந்த விமான சேவை நடைமுறையில் இருக்கும். (ஐ)

# வாக்காளர் அட்டை விநியோகம் நிறைவு

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

நேற்றும் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதோர் அருகிலுள்ள தபால் நிலையத்துக்குச் சென்று அவற்றைப்பெற்றுக்கொள்ளமுடியும்எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

ஆள் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு மூன்று இலட்சம் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### 160 ஆண்டுகால மத சர்ச்சைக்கு நேற்று அதிரடித் தீர்ப்பு

# அயோத்தி ராம ஜென்ம பூமி இந்துக்களுக்கே! அங்கு கோயில் கட்டவும் நீதிமன்றம் அனுமதி!!

## இடிக்கப்பட்ட பாபர் மசூதி அமைக்க மாற்று நிலம் வழங்கவும் உத்தரவு

புதுடெல்லி,நவ.10

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலம் இந்து அமைப்புகளுக்கே சொந்தம் என இந்திய உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பில் நேற்று அறிவித்துள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் பாபர் மசூதி மற்றும் ராமஜென்ம பூமி அமைந்திருந்த இடம் என கூறப்படும் சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலம் பற்றிய பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த அலகாபாத் உயர்நீதிமன்றம் அந்த நிலத்தை சன்னி வக்பு வாரியம், நிர்மோகி அகாரா, ராம் லல்லா ஆகிய 3 அமைப்புகளும் சரிசமமாக பிரித்து கொள்ள வேண்டும் என்று கடந்த 2010 ஆம் ஆண்டு தீர்ப்பு கூறியது.




இதை எதிர்த்து அந்த அமைப்புகள் உள்ளிட்ட 14 பேர் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையில் நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்டே, டி.வை. சந்திரசூட், அசோக் பூண், அப்துல் நசீர் ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு இந்த மேன்முறையீட்டு வழக்கை விசாரித்து வந்தது.

விசாரணை நடந்து கொண்டு இருந்த போதே, இந்த விவகாரத்தில் நீதிமன்றத்துக்கு வெளியே தீர்வு காணும் யோசனையை முன்வைத்த அரசியல் சாசன அமர்வு, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி இப்ராகிம் கலிபுல்லா தலைமையில் வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீரவிசங்கர், மூத்த வக்கீல் ஸ்ரீராம் பஞ்சு ஆகியோரைக் கொண்ட சமரச குழுவை அமைத்தது.

அந்தக் குழு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சமரச பேச்சு நடத்தியது. ஆனால் அந்த குழுவின் சமரச முயற்சி தோல்வியில் முடிந்தது. இதுபற்றிய தகவல் கடந்த ஓகஸ்டு மாதம் 2 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, ஓகஸ்டு 6 ஆம் திகதி முதல் இந்த வழக்கு விசாரணையை அரசியல் சாசன அமர்வு தினசரி விசாரித்து வந்தது. விசாரணையின் போது சன்னி வக்பு வாரியம், நிர்மோகி அகாரா, ராம் லல்லா தரப்பினர் தங்கள் தரப்பு வாதங்களை முன் வைத்தனர். 40 நாள்களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த விசாரணை கடந்த மாதம் 16 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இதைத்தொடர்ந்து, நீதிபதிகள் திகதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்திவைத்தனர்.

அரசியல் சாசன அமர்வுக்கு தலைமை வகிக்கும் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் வருகிற 17 ஆம் திகதி ஓய்வு பெற இருப்பதால், அதற்கு முன்னதாக தீர்ப்பு வழங்கப்படும் என்று கூறப்பட்டது.

இந்தநிலையில், தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் நேற்றுமுன்தினம் உத்தரபிரதேச மாநில தலைமைச் செயலாளர் ராஜேந்திர குமார் திவாரி, டி.ஜி.பி. ஓம்பிரகாஷ் சிங் ஆகியோரைத் தனது நீதிமன்ற அறைக்கு வரவழைத்தார். அவர்களுடன், உத்தரபிரதேச மாநிலத்தில் சட்டம் –ஒழுங்கைப் பராமரிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி கேட்டு அறிந்தார். சுமார் ஒரு மணி நேரம் அவர்களுடன் தலைமை நீதிபதி ஆலோசனை நடத்தினார்.

இதைத்தொடர்ந்து அயோத்தி மேன்முறையீட்டு வழக்கில் அரசியல் சாசன அமர்வு நேற்றுக் காலை 10.30 மணிக்கு தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அயோத்தி மேன்முறையீட்டு வழக்கில் உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்க இருந்ததையொட்டி, இந்தியா முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

குறிப்பாக உத்தரபிரதேச மாநிலத்தில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டு இருக்கிறது.

அயோத்தியில் மாநில பொலிஸாருடன் துணை இராணுவப் படை வீரர்கள் 4 ஆயிரம் பேரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். நகரம் முழுவதும் பாதுகாப்பு வளையத்தில் கொண்டு வரப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது.

இந்நிலையில், அயோத்தி வழக்கில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு இறுதி தீர்ப்பை வாசித்தது.

இதில், அயோத்தி வழக்கில் 5 நீதிபதிகளும் ஒருமித்த தீர்ப்பு வழங்குகிறோம் என தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் கூறினார்.

தொடர்ந்து, சன்னி பிரிவுக்கு எதிரான ஷியா வக்பு போர்டு தொடர்ந்த மேன்முறையீடு வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளது எனத் தீர்ப்பில் வாசிக்கப்பட்டு உளளது.

தொடர்ந்து தீர்ப்பில் மேலும் கூறப்பட்டவை வருமாறு: –

மதச்சார்பின்மையே அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை. அதன்படியே உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது.

இந்த வழக்கில், பாபர் மசூதி வெற்றிடத்தில் கட்டப்படவில்லை. பாபர் மசூதிக்கு கீழே கண்டறியப்பட்ட கட்டுமானங்கள் இஸ்லாமியர்களின் கட்டுமானங்கள் அல்ல. இவை தொடர்பில் தொல்லியல் துறை வழங்கியுள்ள ஆதாரங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவை.

சர்ச்சைக்குரிய இடம் இரு மதத்தினராலும் தங்கள் நம்பிக்கையை வெளிபடுத்தக்கூடிய இடமாக இருந்துள்ளது. அயோத்தி ராமர் பிறந்த இடம் என இந்து மக்கள் நம்புகின்றனர் என்பது மறுக்க இயலாதது. இந்துக்களின் நம்பிக்கையை குலைக்க முடியாது.

ஆனால், நிலத்தின் உரிமையை வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் கோர முடியாது.

அந்த இடத்தினை பாபர் மசூதி என முஸ்லிம்கள் அழைக்கின்றனர். பாபர் மசூதி இடம் முழுக்க முழுக்க தங்களது என இஸ்லாமிய அமைப்புகள் நிரூபிக்கவில்லை.

நீதிமன்றங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எதனையும் நம்பிக்கையின் அடிப்படையில் மட்டும் முடிவெடுத்து விட முடியாது. நிர்மோகி அகாரா வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல என அது தள்ளுபடி செய்யப்படுகிறது.

அமைதியை காக்கவும், பாதுகாப்பினை பராமரிக்கவும் ஏற்ற வகையில் நீதிமன்றத் தீர்ப்பினை ஏற்று கொள்ள வேண்டும்.

நிலம் 3 ஆக பிரித்து கொடுத்தது தவறு. வக்பு போர்டு ஏற்கும் இடத்தில் 5 ஏக்கர் நிலம் தர மத்திய அரசு, உத்தர பிரதேச அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

சர்ச்சைக்குரிய இடத்தை மூன்றாக பிரித்து அலகாபாத் நீதிமன்றம் வழங்கியது தவறு. கடந்த 1857 ஆம் ஆண்டுக்கு முன் சர்ச்சைக்குரிய இடத்தில், உரிமைக்கான ஆவணங்களை நிரூபிக்க முஸ்லீம் அமைப்புகள் தவறி விட்டன.

ஆகவே, அயோத்தி நிலம் இந்து அமைப்புகளுக்கே சொந்தம்.– என உச்சநீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய இடத்தில் கோவில் கட்டுவதற்கு 3 மாதங்களில் மத்திய அரசு அறக்கட்டளையை ஏற்படுத்த வேண்டும். முஸ்லீம்களுக்கு மசூதி கட்டுவதற்காக தகுந்த இடத்தில் 5 ஏக்கர் மாற்று நிலத்தை வழங்க வேண்டும். – எனவும் நீதிபதிகள் தரப்பில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இந்தத் தீர்ப்பு மூலம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டலாம் என உச்சநீதிமன்றம் அனுமதி அளித்து உள்ளது.

# தீர்ப்பை மதிக்கின்றோம்; ஆனால் திருப்தியில்லை

### சன்னி வக்பு வாரியம் கூறுகிறது



புதுடெல்லி,நவ.10

பாபரி மசூதி நிலம் தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதிக்கிறோம் என்றும் ஆனால் அதில் திருப்தியில்லை என்றும் சன்னி வக்பு வாரியம் தெரிவித்து உள்ளது.

வாரிய வழக்கறிஞர் ஜாபர்யாப் ஜிலானி செய்தியாளர்களிடம் கூறும்பொழுது, நீதிமன்ற தீர்ப்பினை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால் அதில் எங்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. அடுத்து என்ன செய்வது என்பது பற்றி நாங்கள் முடிவு செய்வோம் – என கூறியுள்ளார்.

# அயோத்தித் தீர்ப்பைத் தொடர்ந்து ஜம்மு - காஷ்மீரில் தடை உத்தரவு



காஷ்மீர்,நவ.10

அயோத்தி வழக்கு தீர்ப்பு எதிரொலியாக ஜம்மு மற்றும் காஷ்மீர் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

தொடர்ந்து பல்வேறு இடங்களிலும் கூடுதல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். சாலையில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஜம்மு மற்றும் ரியாசி உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் வாகன போக்குவரத்து எதுவுமின்றி வெறிச்சோடி உள்ளன.

ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு, பின்பு ஜம்மு மற்றும் காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரித்து கடந்த ஓகஸ்ட் 5 இல் மத்திய அரசு அறிவித்தது.

அதற்குப் பின்னரான பதற்ற நிலை அங்கு தொடருகின்றது.

# நீதித் துறைச் செயற்பாடுகளில் இந்தியாவில் தமிழகம் முதலிடம்

நாட்டிலேயே, நீதித்துறை, சிறப்பாக செயற்படும் மாநிலங்களில், தமிழ்நாடு முதலிடம் பிடித்திருக்கிறது.

இருப்பினும், ஒட்டுமொத்தமாக, வழக்குகளை கையாண்டு, அதனை விசாரித்து, நீதி வழங்குவதில், மூன்றாம் இடம் மட்டுமே கிடைத்துள்ளது.

டாடா நிறுவனத்தின் அறக்கட்டளை, பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து ஆய்வு நடத்தி வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு முதல், காவல்துறை, சிறைத்துறை மற்றும் தடயவியல்துறைகளின் செயற்பாடு, நீதி வழங்குதல், சட்ட உதவி, காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளில், யார், யார் எந்தெந்த இடத்தைப் பிடித்துள்ளனர் என்பது தொடர்பாக ஆய்வு நடைபெற்றது.

இதில், எந்தப் பிரிவிலும் முதலிடத்தைப் பெறாத மகாராஷ்டிரா, ஒட்டுமொத்த சராசரி கணக்கின்படி அடிப்படையில், முதலிடம் பிடித்திருக்கிறது. ஆனால், அனைத்துப் பிரிவுகளிலும், தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் இடையே முதலிடத்தைப் பிடிப்பதில் கடும் போட்டி நிலவியுள்ளது.

குறிப்பாக, குறைவில்லாத நீதிபதிகள் எண்ணிக்கை, வழக்குகளின் மீதான தீர்வு, நீதித்துறைக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை உள்ளடக்கிய நீதித்துறை சார்ந்த செயற்பாடுகளில் , 70 விழுக்காட்டிற்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்று தமிழ்நாடு முதலிடம் பிடித்திருக்கிறது.

இதேபோன்று, காவல்துறையை நவீனப்படுத்துவது, மகளிர் பங்களிப்பை அதிகரிப்பது, நிதி ஒதுக்கீடு, உட்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய, காவல் துறை பிரிவுகளின் செயற்பாடுகளிலும், தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது.

# அமெரிக்காவில் கோர விபத்து வீட்டுக்குள் விழுந்த விமானம்!



வொஷிங்டன்,நவ.10

அமெரிக்காவில் வீட்டுக்குள் விமானம் விழுந்த கோர விபத்தில், அதை இயக்கிய விமானி சம்பவ இடத்திலேயே உடல் கருகி பலியானார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் டோரன்ஸ் நகரில் இருந்து உப்லண்ட் நகருக்கு சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. 4 பேர் அமரக்கூடிய இந்த விமானத்தில் விமானி மட்டும் இருந்தார்.

சான் பெர்னார்டினோ நகருக்கு அருகே பறந்து கொண்டிருந்தபோது, விமானம் திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் மிகவும் தாழ்வாக பறந்த விமானம் அங்குள்ள வீட்டின் மேற்கூரையை உடைத்து கொண்டு உள்ளே விழுந்தது.

விழுந்த வேகத்தில் விமானத்தில் தீப்பிடித்தது. இதில் வீடு முழுவதும் தீப்பற்றி எரிந்தது. இந்த கோர விபத்தில் விமானி சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பலியானார். அதே சமயம் வீட்டுக்குள் இருந்த ஒரு குழந்தை உள்பட 3 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரிக்கப்படுகிறது.

# எண்பது லட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விலையான நண்டு

டோக்கியோ,நவ.10

ஜப்பானில் நண்டு ஒன்று சுமார் எண்பது லட்சம் ரூபாவுக்கு ஏலம் போனது.

ஜப்பானில் இப்போது பனிக்காலம். இந்த பனிக்காலத்தில் பிடிபடும் நண்டுகளை ஜப்பானியர்கள் மிகவும் விரும்பிச் சமைத்துச் சாப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் அந்த நாட்டின் மேற்கு பகுதியில் ஹோன்சு தீவில், டோட்டோரி நகரில் உள்ள மீன் பிடி துறைமுகத்தில் பனிக்கால நண்டுகள் ஏலம் விடப்பட்டன. இதில் ஒரு நண்டு 46 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு (இலங்கை நாணயப்படி சுமார் ரூ.80 லட்சம்) ஏலம் எடுக்கப்பட்டது. அந்த நண்டு 14.6 செ.மீ. நீளமும் 1,240 கிராம் எடையும் கொண்டதாகும்.

இது குறித்து உள்ளூர் அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், நாங்கள் எதிர்பார்க்காத விலையில் நண்டு ஏலம் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நண்டு கடந்த ஆண்டின் சாதனையை முறியடித்து இருக்கிறது. எனவே இது உலகின் மிக விலையுயர்ந்த நண்டு என்று நாங்கள் நம்புகிறோம். கின்னஸ் சான்றிதழ் பெற விண்ணப்பிப்பதை அரசாங்கம் பரிசீலிக்கும் என்றார்.



# ஐந்து நாள்கள் போராட்டத்தில் ஈராக்கில் 23 பேர் வரைச் சாவு!

பாக்தாத்,நவ.10

ஈராக் நாட்டில் கடந்த ஞாயிற்று கிழமையில் இருந்து 5 நாள்களுக்குள் போராட்டத்தில் ஈடுபட்ட 23 பேர் கொல்லப்பட்டு உள்ளனர்.

ஈராக்கில் ஊழல் மற்றும் வேலையின்மை அதிகரித்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். கடந்த மாதம் முதலாம் திகதி தொடங்கி நடந்து வரும் இந்தத் தொடர் போராட்டத்தில் இதுவரை 250 இற்கும் அதிகமானோர் பலியாகிவிட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசு இது வரை முறையாக அறிவிக்கவில்லை.

ஈராக்கின் மனித உரிமைகளுக்கான தனித் தூதரகம் வெளியிட்டுள்ள தகவலில், வேலை வாய்ப்பு வழங்க வேண்டும், ஊழலை ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், அரசின் மந்திரி சபை மறுசீரமைப்பு, தேர்தல் சட்டங்களில் திருத்தம் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரியும் கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து நடத்தப்பட்டு வரும் நாடு தழுவிய போராட்டத்தில், கடந்த நவம்பர் 7 ஆம் திகதி வரை வன்முறைக்கு 269 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். இது தவிர்த்து ஈராக் பாதுகாப்பு படையினர் உட்பட 8 ஆயிரம் பேர் வரை காயமடைந்து உள்ளனர்.



கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து 7 ஆம் திகதி வரை 23 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இதேபோன்று போராட்டக்காரர்கள் மற்றும் ஈராக் பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட 1,077 பேர் காயமடைந்து உள்ளனர். அவர்களில் பலர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். கைது செய்யப்பட்ட 201 பேர் விடுவிக்கப்பட்டு விட்டனர். – என்று தெரிவித்து உள்ளது.

மந்திரிசபை மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் சட்டங்களில் திருத்தம் ஆகியவை கொண்டு வரப்படும் என ஈராக் அரசு கூறியுள்ளது.

# சீன வாலிபரின் காதுக்குள் பதினொரு கரப்பான்கள்

பீஜிங்,நவ.19

சீனாவில் வாலிபரின் காதுக்குள்11 கரப்பான் பூச்சிகள் இருந்த அதிர்ச்சி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள ஹுய்சோ மாவட்டத்தில் வசித்து வருபவர் எல்வி (வயது 24). இவர் திடீரென்று காது வலியின் காரணமாகத் தூக்கத்தில் இருந்து எழுந்தார்.



காதுக்குள் ஏதோ ஊர்ந்து செல்வது போல் இருப்பதாகவும், கடுமையான அரிப்பை உணர்வதாகவும் வீட்டில் இருந்தவர்களிடம் கூறினார். இதனையடுத்து அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்களுக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அவரது வலது புற காதுக்குள் ஒரு பெரிய கரப்பான் பூச்சியும் அதனுடைய 10 குட்டிகளும் ஒடிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்தனர்.

இதையடுத்து, நீண்ட நேர சிகிச்சைக்கு பிறகு அவரது காதில் இருந்து 11 கரப்பான் பூச்சிகளையும் மருத்துவர்கள் அகற்றினர். எல்வியின் காதுக்குள் கரப்பான் பூச்சிகள் எப்படி சென்றன என்பது தெரியவில்லை.

# அயர்ன் மான்' திரைப்படக் காட்சியை நிஜமாக்க முயல்கின்றது சீன ராணுவம்



ஹொலிவூட் படமான அயர்ன் மான் படத்தில் வரும் காட்சிகளைப் போன்று, இராணுவ வீரர்கள் திடீரென பறந்து பறந்து எதிரிகளை தாக்கவல்ல, ஆயுதம் தாங்கிய கவச உடைகளை வடிவமைப்பதற்கு சீன இராணுவம் முடிவு செய்துள்ளது. எறிகுண்டுகள், துப்பாக்கிகள், குண்டுகளை அடுத்தடுத்து உமிழும் பிரத்தியேகக் கருவிகள் கொண்டதாக, அந்த கவச உடையைத் தயாரிக்க சீன இராணுவம் உத்தேசித்துள்ளது.

எதிரிகளை நோக்கி முன்னேறும் இராணுவ வீரர், திடீரென எதிரிகள் சூழ்ந்துவிட்டால், கண்ணிமைக்கும் நேரத்தில், மேலே பறந்து பறந்து தாக்கும் வகையில், இந்தப் பிரத்யேக கவச ஆடை வடிவமைக்கப்படுகிறது. இதையொட்டி, திறன்மிக்க போர்வீரரின் பிரத்யேக கவச அமைப்பு – 2019 என்ற தலைப்பில், தலைநகர் பெய்ஜிங்கில், சீன இராணுவத்தின் ஆயுதத் தளவாட கொள்முதல் பிரிவு போட்டியை நடத்துகிறது.

இந்தப் போட்டியில் தேர்வாகும் நிறுவனங்களிடமிருந்து, அயர்ன் மமான் சூப்பர் ஹீரோ உடை போன்ற பிரத்தியேக கவச உடைகளை கொள்முதல் செய்ய சீன இராணுவம் முடிவு செய்திருக்கிறது.

## உலகச் செய்தித் துளிகள்

∗ஹொண்டுராஸ் மாகாணத்தில் லொறிக்குள் அடைத்து வைத்து கடத்தி வரப்பட்ட பெண்கள், குழந்தைகள் உட்பட 100 அகதிகளை பொலிஸார் மீட்டனர். அவர்கள் அனைவரும் கௌதமலா, எல் சல்வடோர் மற்றும் கொலம்பியா நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

∗கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் கடந்த சில நாள்களாக இடைவிடாது கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் அங்குள்ள பல்வேறு மாகாணங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. அங்கு மழை, வெள்ளத்துக்கு இதுவரை 25 பேர் பலியாகினர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

∗ஆப்கானிஸ்தானில் கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் நடந்த அதிபர் தேர்தலின் முடிவுகள் இன்னும் வெளியாகாத நிலையில், 8 ஆயிரத்து 400 வாக்குச் சாவடிகளில் மறு வாக்கு எண்ணிக்கையை நடத்த இருப்பதாக அந்த நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதனால் தேர்தல் முடிவுகள் வெளியாவதில் மேலும் தாமதம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

∗ உகாண்டா நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள படேர் நகரில் மின்னல் தாக்கியதில் 6 பேர் பலியாகினர். மேலும் 11 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

∗ கொங்கோ நாட்டைச் சேர்ந்த கிளர்ச்சி அமைப்பின் முன்னாள் தலைவரான போஸ்கோ என்டகாண்டாவுக்கு போர் குற்றவழக்கில் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சர்வதேச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு அளித்தது.

# இறுதி அஸ்திரமும் புஷ்வாணமானதால் ராஜபக்ஷ படையணி தோல்வி பீதியில்!

## புலனாய்வு அறிக்கைகள், கருத்துக் கணிப்புகளின்படி சஜித்தின் வெற்றி உறுதி என்கிறார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றி பெறுவார் என்பதைப் புலனாய்வு அமைப்புகளின் அறிக்கைகளும், சிவில் அமைப்புகளின் கருத்துக் கணிப்புகளும் உறுதிப்படுத்தியுள்ளன என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாட்டில் எட்டுத்திக்கிலும் வெற்றி அலை வீசுவதால் அதனை வரலாற்று வெற்றியாக மாற்றியமைப்பதற்காகவே தீவிரமாக செயற்பட்டுவருகின்றோம். எனவே, 'சஜித் ஒப்பரேஷன்' நவம்பர் 16 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவுசெய்து, 18 ஆம் திகதி அவரை ஜனாதிபதிக் கதிரையில் நிச்சயம் அமர வைப்போம் என்றும் அவர் கூறினார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் கண்டி திகன பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இனவாதத்தையும், மதவாதத்தையும் கையிலெடுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் இலகுவில் வெற்றி பெற்றுவிடலாம் என்பதே ராஜபக்ஷாக்களின் பிரசார வியூகமாக இருந்தது. இதற்காகவே விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உட்பட மேலும் பலர் அரசியல் மேடைகளில் இனவாதத்தைக் கக்கினர்; மதவாதத்தைத் தூண்டினர். ஆனால் பெரும்பாலான சிங்கள மக்கள் இவற்றை நிராகரித்தனர்.



இதனால் கதிகலங்கிப் போன ராஜபக்ஷ படையணி, வழமையான பாணியில் போர் வெற்றியை விற்றுப் பிழைக்க முற்பட்டது. பழைய பல்லவியையே மீண்டும், மீண்டும் பாடியமையால் அந்த வியூகமும் கைகூடவில்லை.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஜித்துக்கு ஆதரவளிக்கும் முடிவை எடுத்தால் அதனை வைத்து சிங்கள, பௌத்த வாக்குகளை வேட்டையாடிவிடலாம் எனவும் ராஜபக்ஷாக்களும், அவர்களின் சகாக்களும் திட்டம் போட்டனர்.

எனினும், களநிலைவரத்தை சிறப்பாக ஆராய்ந்து, தந்திரோபாய விட்டுக்கொடுப்புடன் நிபந்தனையற்ற ஆதரவை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்ததால் – என்ன செய்வதென்று புரியாமல் மொட்டுக்கட்சி காரர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர். இறுதி அஸ்திரமும் புஷ்வாணமாகும் நிலை உருவாகியுள்ளதால் தொடை நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சந்தர்ப்பவாத அரசியலுக்காகவே ராஜபக்ஷாக்களும், அவர்களின் சகாக்களும் இனவாதம், மதவாதம் பேசுகின்றனர், போலிகளைப் பரப்புகின்றனர் என்பதைச் சிங்கள, பௌத்த மக்கள் இன்று உணர்ந்துவிட்டனர். சஜித்தின் கூட்டத்துக்கு அலைகடலெனத் திரண்டுவரும் மக்கள் இதனை எம்மிடம் தெளிவுபடுத்துகின்றனர்.

அதேவேளை, சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியெனப் புலனாய்வு அமைப்புகள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன. அரச சார்பற்ற அமைப்புகளால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளிலும் இது உறுதியாகியுள்ளது.

சில மாவட்டங்களில் மஹிந்தவுக்கு ஆதரவு இருந்தாலும், அதற்கு சமாந்தரமாக சஜித் அலையும் வீசுகின்றது. ஆனால், சஜித்துக்கு சாதகமாக உள்ள மாவட்டங்களில், சஜித் 100 வீதம் என்றால் மஹிந்த 35 வீதம் என்ற நிலையே இருக்கின்றது. அதாவது 65 சதவீத மேலதிக வாக்குகளால் மாவட்டங்களை சஜித் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

அந்த வெற்றியை வரலாற்று வெற்றியாக மாற்றியமைப்பதே எமது இலக்காகும். அதற்காகவே தீவிரமாக செயற்பட்டுவருகின்றோம். சஜித்தால் மட்டுமே நாட்டில் நீடித்து நிலைக்கக்கூடிய நிலையான சமாதானத்தையும், நிலைபேண்தகு அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும். எனவே, அன்னமே எங்கள் தெரிவாக இருக்க வேண்டும். அப்போதுதான் நல்லெண்ணங்கள் நாட்டில் நிறைவேறும் – என்றார். (ஐ)

## கோட்டாவின் வெற்றியில் தமிழ், முஸ்லிம் பங்களிப்பும் கட்டாயம் இருக்கவேண்டும்

### வலியுறுத்துகின்றார் வரதராஜப்பெருமாள்

கொழும்பு, நவ. 10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, வெறுமனே சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரம் வெற்றி பெறுவதை விரும்புபவர் அல்லர் என இணைந்த வடக்கு – கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

தனது வெற்றியில் தமிழ், முஸ்லிம் மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என்றே கோட்டாபய எதிர்பார்க்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இராஜகிரியவிலுள்ள சுதந்திரக் கட்சி – பொதுஜன பெரமுன முன்னணியின் இணைந்த அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு மக்கள் ஏற்கனவே தீர்மானித்துவிட்டார்கள். தெற்கு வாழ் மக்களில் 75 வீதமானவர்கள் கோட்டாபயவுக்கு நிச்சயம் வாக்களிப்பார்கள்.

அதேபோன்று தமிழ் மக்களும் சிறந்த தீர்மானத்தை எடுப்பதற்கு நாம் அவர்களைச் சரியான முறையில் வழிநடத்தவேண்டும். எனவேதான் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி கோட்டாபயவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தது.

அத்தோடு சுய நிர்ணயம், சமஷ்டி உள்ளிட்ட எந்த விடயங்களிலும் கூட்டமைப்புக்கு அக்கறை கிடையாது. இலஞ்சம் கொடுத்து ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வாங்கியிருக்கிறது.

எனவே சஜித் ஆட்சிக்கு வந்தால் மக்கள் நிம்மதியாக இருக்க முடியாது. காரணம் அவருடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட அட்டூழியங்களே இவர் ஆட்சிக்கு வந்தால் தொடரும் – என்றார். (ஐ)

## கோட்டாவுக்கு எதிராக தயாராகும் வீடியோவில் சஹ்ரானின் மனைவி!

கொழும்பு, நவ. 10

தற்கொலைக் குண்டுதாரி சஹ்ரானின் மனைவியை வைத்து, எமக்கெதிராகச் சேறுபூசும் வீடியோ தயாரிக்கப்படுகின்றது என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தோல்வியைத் தாங்கிக்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும், புதிய ஜனநாயக முன்னணியினருக்கும் முடியாது. ஆகையால், எமக்கெதிரான சேறுபூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதன் ஓர் அங்கமாக, ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பிரதான காரணமாக அமைந்திருந்த சஹ்ரானின் மனைவியை வைத்து வீடியோ தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த வீடியோவை, நவம்பர் 13ஆம் திகதி யன்று வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ளனர். அதனூடாக, சஹ்ரானுக்கும் கோட்டா, மஹிந்தவுக்கும் இடையில் நெருங்கிய உறவொன்று இருந்ததாகக் காண்பிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.



கோட்டாவுக்கு இரண்டாவதுவிருப்பு வாக்கை வழங்க விருப்பதாக ஹிஸ்புல்லாஹ் தெரிவித்திருந்தார். எங்களுக்கு எந்த ஒரு, இரண்டாவது விருப்பு வாக்கும் தேவையில்லை. ஏப்ரல் 21ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களு டன் தொடர்புடைய எந்தவொருவரின் ஒத்துழைப் பும் எங்களுக்குத் தேவையில்லை.

இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் கூறியிருக்கின்றமையைப் போல, சிறுபான்மையின மக்களின் எந்தவோர் ஆதரவும் தனக்குத் தேவையில்லையென, கோட்டாபய ஒருபோதும் தெரிவிக்கவில்லை – என்றார். (ஐ)

## வாக்காளர் அட்டையின்றியும் தேர்தலில் வாக்களிக்க முடியும்

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்காளர் பட்டியலில் தமது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கும் அனைத்து வாக்காளர்களும் உத்தியோகபூர்வ தங்களது வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்க முடியும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

வாக்களிப்பின்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையைச் சமர்ப்பித்து வாக்களிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் உத்தியோக பூர்வ முதலாவது பெறுபேற்றை 17 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் வெளியிடக்கூடியதாக இருக்கும் – என்றார். (ஐ)

## கோட்டாவை ஆதரிக்க மறுத்த பிக்குவுக்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, நவ. 10

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து தேர்தல் பேரணியில் கலந்துகொள்ள மறுத்த பௌத்த பிக்குவுக்குக் கொலை மிரட்டல் விடுத்தவர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கோட்டாபயவுக்கு ஆதரவு தெரிவித்து தேர்தல் பேரணியில் கலந்து கொள்ள மறுத்த சூரியதேவா ஸ்ரீ ரஜமஹா விகாரை தலைமைப் பீடத்தின் கிம்புல்வனே சீலநந்த தேரரைக் கொன்று விடுவேன் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஜகத் சமரவிக்ரம கொலை மிரட்டல் விடுத்திருந்தார். இதனையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஜகத் சமரவிக்ரம நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (ஐ)

## விபத்தில் ஒருவர் சாவு!

அம்பாறை, நவ. 10

அம்பாறை, உதயபுரம் பகுதியில் நேற்று முன் தின இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கல்முனையிலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த லொறியும் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி விபத்திற்குள்ளாகின.

இவ்விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டியும் அந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த வரும் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். இதில் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்தை தொடர்ந்து லொறிச் சாரதி கைது செய்யப் பட்டுள்ளார். (ஐ)

# தன் ஆட்சியில் 8000 ஏக்கர் நிலத்தை அமெரிக்காவுக்கு விற்றவர் மஹிந்தர்!

## அனுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 10

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 8000 ஏக்கர் காணிகள், அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அனுராதபுரத்தில் நடந்த தேர்தல் பேரணியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமெரிக்காவுடனான எம்.சி.சி உடன்பாட்டுக்கு எதிராக இருப்பது போன்று பாசாங்கு செய்யும் மஹிந்த ராஜபக்ஷ, சோமாவதிய வில் 5,000 ஏக்கர் நிலத்தையும், பெல்வத்தையில் 2000 ஏக்கர் நிலத்தையும், இகினிமிட்டியாவில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தையும் அமெரிக்க நிறுவனங் களுக்கு குத்தகைக்கு கொடுத்த வர்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பஸில், கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, கற்பிட்டியில் உள்ள 14 தீவுகளை விற்பதற்குத் திட்டமிட்டிருந்தார். அவற்றில் இரண்டு தீவுகள், இந்திய மற்றும் டென்மார்க் நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன – என்றார். (ஐ)

# 14 வயதுச் சிறுமியைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தினர் என உறவினர், தரகர் கைது!

மட்டக்களப்பு, நவ. 10

மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பிரதேசத்தில் 14 வயதுச் சிறுமியை பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய உறவினர் மற்றும் தரகர் உட்பட இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர். ஏனைய 5 பேர் தலைமறைவாகியுள் ளனர்.

கைது செய்யப்பட்ட சிறுமியின் உறவினர் மற்றும் தரகர் உட்பட இருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஆயித்தியமலைப் பகுதியில் 8 ஆம் ஆண்டில் கல்வி கற்றுவரும் 14 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கடந்த புதன்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.எஸ். எஸ். சமந்த தலைமையிலான புலனாய்வுப் பிரிவினர் அந்தச் சிறுமியின் தரகரைக் கையடக்கத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு பேசிக் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து அந்தச் சிறுமியின் உறவினர் ஒருவரைக் கைது செய்ததுடன் சிறுமியை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அந்தச் சிறுமியை அவரது உறவினர் ஒருவர் வீட்டில் வைத்து துஷ்பிரயோகத்திற்குட்படுத்தி வந்தமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தத் தரகர் மற்றும் ஆசிரியர் ஒருவர் மற்றும் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட 7 பேர் பாலியல் தொழில் நடவடிக்கையில் இந்தச் சிறுமியை ஈடுபடுத்தியுள்ளனர் எனவும், அதற்காக ஒருவருக்குத் தலா 20 ஆயிரம் ரூபா பணம் வசூலிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 விபசார விடுதிகள் இயங்கி வருவதாகவும் தலைநகரில் இரண்டு விபசார விடுதிகள் இயங்கி வருவதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது .

உறவினர் , தரகர் ஆகியோரை கைதுசெய்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோது இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, சிறுமியை துஷ்பிரயோகத்திற்குட் படுத்திய ஆசிரியர் ஒருவர் உட்பட 5 பேரையும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

அமரர் நடராஜா ரவிராஜ்
நினைவுப் பேருரை -2019



போரின் முடிவும்
போராட்டத் தொடர்ச்சியும்
-: நிகழ்த்துபவர் :-
அருட்தந்தை. S.J இமானுவல்
(தலைவர், உலகத்தமிழர் பேரவை)

காலம் : 10.11.2019 ஞாயிற்றுக் கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : தென்மராட்சி கலாசார மண்டபம்
(சிவன் கோவிலடி, சாவகச்சேரி.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
- ஏற்பாட்டுக் குழு

நிகழ்வு மேடையில்.......
அகவணக்கம்
ஈகச்சுடரேற்றல்
மலர் மாலை அணிவித்தல்
வரவேற்புரை
திருமதி. மகேந்திரன் நிர்மலா
(சமூக செயற்பாட்டாளர்)
தலைமையுரை
சட்டத்தரணி. கேசவன் சயந்தன்
(முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாணசபை)
ஆத்மசாந்தியுரை
சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு, வாரிவனேஸ்வரர் சிவன் கோவில்)
நினைவுப் பேருரை
போரின் முடிவும் போராட்டத் தொடர்ச்சியும்
அருட்தந்தை. S.J இமானுவல்
(தலைவர், உலகத்தமிழர் பேரவை)
விருது வழங்கல்
சிறப்புரை
கௌரவ. இராஜவரோதயம் சம்பந்தன்
( தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு )
நன்றியுரை
உயர்திரு. ம. மரியபேர்னாட்
021-2-27-17-07




## கிளிநொச்சியில் வாள்வெட்டு; நால்வர் படுகாயம்

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி -தட்டுவன்கொட்டிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அந்தப் பகுதியிலுள்ள கிராம சேவையாளர் ஒருவரின் சகோதரர்கள் மற்றும் உறவினர்களே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் களத்தில் முதல் வெற்றி தமிழரின் அரசியல் வங்குரோத்துத்தனதுக்கு!

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது!எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது!எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்! – இது மகாபாரதத்தில் பாண்டவர் அணியிலிருந்த கிருஷ்ணரால் அர்ச்சுனனுக்குக் கூறப்பட்டதாக குறிப்பிடும் கீதா உபதேசத்தின் ஆரம்பவரிகள். அத்தினா புரம் அரியணையின் உரித்துக்காக பாண்டவ கௌரவப்பங்காளிகள் குருசேத்திர களத்தில் போரிட முன்னர் இந்த உப தேசம் நடந்தது.

இப்போது சிறிலங்காவின் 'ஜனாதிபதி



மந்தர' என்ற நிறைவேற்று அதிகாரமையத்தில் கொலு இருக்க வேண்டிய உரித்துக்காக சஜித் எதிர் கோட்டாபாய பங்காளிகள் மோதும் களத்துக் குத் திரும்புங்கள்.

அந்தக் களத்துக்காக தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்த விசேட அறிக்கையை நோக்கினால் அதிலும் தமிழர்களுக்குரிய ஒரு உபதேசிப்பு நிலையை அவதானித்துக் கொள்ளலாம்

கோட்டாபாயவை காய்வெட்ட எது நடந்ததோ, அது நன்றாகவே நடந் தது!சஜித்துக்கு ஆதர வளிக்க எது நடக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கிறது! தமிழர்கள் வாக்களிக்கக் கோர எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும். இதனைத்தான் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு தீர்மா னித்தது என்ற விடயத்தை அதிகாரபூர்வமாக அறிக்கையிட்ட இரா.சம்பந்தனின் விசேட அறிக்கையின் செய்தி கூறுகிறது.

ஏன் கோட்டாபாயவுக்கு வாக்களிக்க கூடாது! ஏன் சஜித் பிரேமதாசாவுக்கு வாக்களிக்கவேண்டும்என்பதற் குரியசிலகாரணகாரியங்களை இரா.சம்பந்தனின் அறிக்கை கூறுகிறது.



மஹிந்த ராஜபக்ஷ அர சாங்கம் பிரிபடாத, பிரிக்க முடி யாத நாட்டில் வாழ்வதற்கு ஏது வான சூழலை தமிழ்மக்கள் உள்ளிட்ட சகல மக்களுக்கும் வழங்கத்தவறியமை பிரதான தவறு எனக் கூறும் அந்த அறிக்கை கோட்டாபய ராஜ பக்ஷமற்றும்அவரோடுஆட்சி அதிகாரத்தில் இருந்த முகங் களின்கடந்த காலச்செயற்பாடு கள் கவலையளிப்பன என வும் சுட்டிக்காட்டியது.

ராஜபக்ஷக்களிடம் எதேச்சதிகாரம், தான் தோன்றித்தனம், ஜனநாயகத்தின் மீதான துச்சநிலை ஆகியன உள்ளன என உள்ளது உள்ளபடியே சில குற்றச்சாட்டுக்களையும் அந்த அறிக்கை சொன்னது.

இதனை உறுதிப்படுத்துவது போல மஹிந்த வாதியான எஸ்.பி. திசாநாயக்கவின் பாதுகா வலர்கள் வியாழன் இரவு தாம் பயணித்த வாக னத்தை வழிமறித்த சிலர் மீது துப்பாக்கி பிர யோகத்தையும் செய்துள்ளனர்

இவ்வாறான நிலையில்தான் சஜித் பிரேம தாஸவுக்கு சில புகழாரங்களை அளவுக்கு அதி கமாகவே அடுக்கி, அவரது கொள்கைகளிலும், நிகழ்ச்சித் திட்டங்களிலும் வடக்கு, கிழக்குவாழ் தமிழ்மக்கள் நம்பிக்கை வைத்து அன்னச் சின்னத்தில் போட்டியிடும் அவருக்கு வாக்க ளிக்க வேண்டும் எனவும் அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவுகோரி இரா. சம்பந்தனின் அறிக்கையில் அடுக்கப்பட்டுள்ள புகழாரங்கள் அளவுக்குஅதிகமாகவே தோன்று கின்றன.

இற்றைக்கு 5 வருடங்களுக்கு முன்னர் இதேபோன்ற காரணங்களுடன் மைத்திரிக்கு வாக்களிக்கக்கோரியதும் ஆனால் அதன்பின் னர் பெற்றுக்கொண்ட அடைவுகள் என்ன என்பதும் இந்த இடத்தில் நினைவூட்டக்கூடியது.

சஜித் பிரேமதாஸ குறித்த கூட்டமைப்பின் புகழாரங்கள் இவ்வாறு கூறப்படுகின்றன:-

சஜித் பிரேமதாச ஜனநாயகத்தில் பற்றுறுதி கொண்டவர். சர்வாதிகாரப் போக்கிற்கு அப் பாற்பட்டவர்! சட்டவாக்கத்துறை -காவற்துறை - ஆயுதப்படை சேவை ஆகியவற்றின் மீது பற்றுறுதிபூண்டவர்!! ஐக்கியமான பிரிபடாத, பிரிக்கமுடியாத நாட்டின் உருவாக்கத்திற்கு உத்தரவாதம் அளிக்க கூடியவர். மனித உரிமை கள் மீது பற்றுறுதி கொண்டவர்! நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை மிகுந்தவர். சகல மதங்களையும் மதித்து அவற் றுக்கு சமஉரிமையை வழங்குபவர்!

– என இந்தப் புகழாரங்கள் அடுக்கப்பட்டுள் ளன.

உண்மையில் இரா.சம்பந்தன் கூறும் இவ் வளவு புகழாரங்களையும் யாராவது ஒருவர் சஜித் பிரேமதாஸவுக்கு முன்னால் நின்று கூறி னால் 'சத்தியமாக இவ்வளவு புகழாரங்களுக்கு உரியவன் நானா? நம்பமுடியவில்லை… இல்லை!' – என சஜித் தன்னைத்தானே ஒரு முறை கிள்ளிப்பார்த்திருக்கவும் கூடும்.

தமிழ் அரசியல் பரப்பின் மிக மூத்த அரசியல் வாதியென வும் சாணக்கியர் எனவும் கூறப் படும் இரா .சம்பந்தனே தனது அறிக்கையில் இவ்வாறு சஜித் துக்கு புகழாரங்களைச் சூட்டு வது தமிழ்த் தேசிய அரசிய லின் அதியுச்ச வங்குரோத்து நிலையின் அடையாளமே.

ஆக மொத்தம் வடக்கு, கிழக்குவாழ் தமிழ்மக் களே சஜித்தில் நம்பிக்கை வைத்து அன்னச் சின்னத்துக்கு வாக்க ளித்துக்குக் கொள்ளுங் கள் எனத் தமிழ் தேசிய கூட்ட மைப்புஅதிகாரபூர்வஅறிக்கை வெளிவந்துவிட்டது.

இதற்குள் இவ்வாறான ஓர் அறிக்கை வெளிவருவதற்கு முன்னர், சஜித்துக்கு ஆதரவு அளிப்பதற்காக தமதுதரப்பில் மிகவும்இரகசியமாக சுமார் 6 மணித்தியாலங்கள் வரை ஓர் கூட் டம் இடம்பெற்றதாக ரெலோவும் கதை கூறியது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அதுவும் சஜித் பிரே மதாஸ வேட்பாளராக அறிவிக் கப்பட முன்ரே அவர் மன் னாருக்குச் சென்றபோது 'வருங்கால ஜனாதிபதி அவர் களே வருக! வருக!' – என வாய்விட்டுச் சொல்லி அழைத்த செல்வம் அடைக்கலநாதன், தான் இப்போது சஜித்துக்கு ஆதரவு அளிப்பதா இல்லையா என்பதை முடிவு எடுக்க மிகவும் இரகசியமாக சுமார் 6 மணி நேரம் கூடிப்பேசி னோம் என்கிறார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்த



வரை அது ஐக்கிய தேசியக்கட்சியை விட வேறு எந்ததரப்புக்கும் ஆதரவு வழங்கக்கூடிய தெரிவை எடுக்க வாய்ப்பில்லை என்பதை சாமா னியர்களும் அறிந்துள்ள பின்னணியில் 2009க்குப் பின்னரான கடந்த பத்தாண்டுகால மாக கையறுநிலையில் உள்ள தமிழ்மக்க ளுக்கு எந்தத் தார்மீகத்தின் அடிப்படையில் இவ்வாறு புனைகதைகள் கூறப்படுகின்றன என்பதே வினா.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சஜித் ஆதரவு நிலைப்பாட்டைப்பொறுத்தவரை அதுஜனநாயகத் தின் அடிப்படையில் இருக்கலாம். அது இல் லையென்றால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளுக்குரிய அமைப்பின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா தனது கிளிநொச்சி ஊடகச் சந்திப்பில் சாடியதுபோல இது சுகபோக மற்றும் தன்னலம் சார்ந்த முடிவாகக் கூட இருக்கலாம்.

இவ்வாறாக எந்த அடிப்படை யில் இந்த முடிவு இருந்தாலும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களே சஜித்துக்கு வாக்களியுங்கள் அதனால் கோரமுடியும். அதில் பிரச்சினையில்லை.

ஏனெனில் தமிழர் தாயக அரசி யல் களமும் ஆறு கட்சிகளின் பேச்சுவார்த்தை ஐந்து கட்சி களின் கூட்டணி, 13 அம்சக்கோரிக்கை என நானாவித காட்சிப்படுதல்களுடன் இறுதியில் சஜித்துக்குரிய நிபந்தனையற்ற ஆதரவு என மேமாக முடிக்கப்பட்டுள்ளது

ஆனால் 2009 மே மாதத்துக்குப் பின்னர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருந்து கூட்ட மைப்பே முடிவுகளை எடுத்து வருகின்றது. இந்த நிலையில் இலங்கைத்தீவின் வரலாற்றில் சிங் களத்தலைவர்கள் எவ்வாறு சமாதானத் தேவதை களாவும், நல்லாட்சி நாயகர்களாகவும் தமிழர் தரப்பால் காட்சியளிக்க வைக்கப்பட்டு புகழாரங் களை பெற்றிருந்தார்கள், அதன்பின்னர் அவ் வாறான தலைவர்கள் தமிழர்களுக்கு செய்த கைங்கரியங்களும் எவ்வளவு பிரசித்தமானவை என்பதை கூட்டமைப்பு அறியாததல்ல.

ஆயினும்அவ்வாறானபட்டறிவுகள் இருந்தும் சஜித் பிரேமதாஸ மீது அளவுக்கு அதிகமான நம்பிக்கை ஆரங்களைச் சூட்டி கையறுநிலை யில் உள்ள தமிழ் மக்களுக்கு அவரை ஓர் உச் சக்கதாநாயனாக அடையாளப்படுத்துவது அரசியலில் தவிச்ச முயலடிப்பு சகதமிழ்த் தேசிய அரசி யலின் அதியுச்ச வங்குரோத்து நிலையா கவே இருக்கக்கூடும். *





# காலநிலை மாற்ற அவசரநிலை: எச்சரிக்கும் அறிவியலாளர்கள்

இந்த புவி ஒரு காலநிலை மாற்ற அவசரநிலையை எதிர்கொண்டுள்ளது எனக் கூறும் ஓர் ஆய்வு முடிவை உலகம் முழுவதுமுள்ள 11 ஆயிரம் அறிவியலாளர்கள் ஆதரித்துள்ளனர்.

40 ஆண்டுகால தரவுகளைக் கொண்டு



இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகெங்கும் உள்ள அரசுகள் இந்தப் பிரச்சினையை சரி செய்யத் தவறிவிட்டன என்றும் இந்த ஆய்வு கூறுகின்றன.

### மிக மோசம்

நாம் இதுவரை நம்பியதைவிட உண்மை நிலவரம் மிக மோசமாக உள்ளதாக இந்த ஆய்வு கூறுகிறது.

கடந்த ஒக்டோபர்தான் இதுவரை பதிவு செய்யப்பட்டதிலேயே மிகவும் வெப்பமான ஒக்டோபர் மாதம் என ஓர் ஆய்வு சொல்லியது.

ஆனால், 'பயோசைன்ஸ்' சஞ்சிகையில் வெளியான இந்த ஆய்வு முடிவுகள், முந்தைய ஆய்வுடன் முரண்படுகின்றன.

அதாவது, பூமியின் மேற்பரப்பில் உள்ள வெப்பத்தை மட்டும் கணக்கில் கொண்டு, அது கணக்கிடப்பட்டுள்ள தாகவும், இது வெப்பத்தைக் கணக்கிட போதுமான முறை அல்லவென இந்த புதிய ஆய்வு கூறுகிறது.

கடந்த 40 ஆண்டுகள் காலநிலை எப்படி மாறி உள்ளதென ஆய்வு செய்துள்ள அறிவியலாளர்கள், மனிதன் மற்றும் மிருகங்களின் பெருக்கம், புதை படிவ எரிபொருள் நுகர்வு ஆகியவற்றைக் கணக்கிலெடுத்துள்ளார்கள்.

### நம்பிக்கை இழக்கத் தேவையில்லை

அதேநேரம் முழுவதுமாக நம்பிக்கை இழக்கத் தேவையில்லை என்றும் இந்த ஆய்வு கூறுகிறது. சில நல்ல முன்னேற்றங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த பத்தாண்டு களில் மட்டும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியானது 373 சதவீதம் அதிகரித்துள்ளது என் பது நம்பிக்கை ஊட்டுகிறது. ஆனால், அதேநேரம் புதை படிவ ஆற்றலைவிட 28 மடங்கு இது குறைவு என்றும் சுட்டிக்காட்டுகிறது.



நிலைமை மிகமோசமாக ஆகிக் கொண்டிருக்கிறது. காலநிலை மாற்ற அவசரநிலையை அறிவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இந்த ஆய்வுக்குத் தலைமை தாங்கிய சிட்னி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் தோமஸ் நியூசம், நாம் கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை என்றால் - நம் நுகர்வுக்காகக் கால்நடை வளர்ப்பதைக் குறைத்துக் கொள்ளவில்லை என்றால் – எரி பொருள் தேவைக்காக நிலங்களை அழிப் பதை நிறுத்தவில்லை என்றால் – இப்போது நாம் எதிர்கொண்டிருப்பதைவிட நிலைமை மோசமாகும் என்று அவர் கூறி உள்ளார். அதாவது, இந்த பூமியின் சில பகுதிகள் மக்கள் வாழத் தகுதியற்றவையாக மாறி விடும் என்கிறார் தோமஸ்.

### முந்தைய ஆய்வுகள்

பருவநிலை மாற்றத்திற்கான அரசாங்கங்க ளுக்கிடையேயான குழுவின் ஆய்வுகள் மற்றும் பிற அறிவியலாளர்களின் பல முடிவுகள் விடுத்த எச்சரிக்கையை இந்த புதிய ஆய்வானது ஏற்றுக் கொண்டாலும், பரந்துபட்ட தளத்தில் புதிய வெளிச்சத்தையும் பாய்ச்சுகிறது.

குறிப்பாக ஆறு தளங்களில் உடனடியாக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

ஆற்றல்: புதை படிவ ஆற்றல் நுகர்வைத் தடுக்க வேண்டும். புதை படிவ ஆற்றல் நுகர்வுக்கு அபராதம் விதிக்க வேண்டும். இதற்கான மானியங்களை ரத்து செய்ய வேண்டும்.

**இயற்கை:** காடுகளை மீட்டுருவாக்க வேண்டும், மேய்ச்சல் நிலங்கள் மற்றும் சதுப்புநில காடுகளை அழிவிலிருந்து காக்க வேண்டும்.

**உணவு:** காய்கறிகளை உண்ண வேண்டும். காடுகளை அழித்துப் பண்ணைகள் உருவாக்கி, அவற்றில் மாமிச உணவுத் தேவைக்காக விலங்குகள் வளர்க்கப்படுகின்றன. அதனால், மாமிச நுகர்வைக் குறைக்க வேண்டும்.

**குறைந்த நேர மாசு:** மீத்தேன், ஹைட்ரோஃப்ளோரோ கார்பன் நுகர்வைக் குறைக்க வேண்டும்.

**பொருளாதாரம்:** புதை படிவ ஆற்றலை சார்ந்திருக்காதவாறு பொருளாதாரத்தை மாற்ற வேண்டும்.

**மக்கள்தொகை:** மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதனை ஆதரிக்கும் அறிவியலாளர்கள் யார்?

153 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரம் அறிவியலாளர்கள் இதனை ஆதரிக்கிறார்கள். இதனை ஆதரித்துக் கையெழுத்திட்ட அறிவியலாளர்கள் பெயர்கள் வெளிப்படையானது; இணையத்தில் பதிவேற்றப் பட்டுள்ளது. *

# அதீத விவசாயத்தால் பூச்சி இனங்கள் அழிவு!

ஜேர்மனி முழுவதும் உள்ள காடுகள் மற்றும் புல்வெளிகளில் பூச்சிகள் மற்றும் சிலந்திகள் அழிந்து வருவதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.



இந்த அழிவு குறித்து எச்சரிக்கை விடுத்துள்ள விஞ்ஞானிகள், இது அதிகளவிலான விவசாயத்தால் ஏற்படுவதாக தெரிவித்துள்ளனர்.

பட்டாம் பூச்சிகள், ஊரும் பூச்சிகள் மற்றும் பறக்கும் பூச்சிகளின் வாழ்விடங்களைக் காப்பாற்றுவதாயின் மனிதர்கள் நிலங்களை பயன்படுத்துவதில் ஒரு மிகப்பெரிய மாற்றம் வேண்டும் என விஞ்ஞானிகள் கோருகின்றனர்.

உலகமுழுவதும் உள்ள பூச்சிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நேச்சர் என்ற சஞ்சிகையில் வெளியான சமீபத்திய ஆய்வுக் கட்டுரையில், பல பூச்சி இனங்கள் அழிவுப் பாதைக்குச் செல்கின்றன உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.



ஜெர்மனியில் உள்ள தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான செபஸ்டியன் செபால்ட், பூச்சிகள் அழிந்து வருவதற்கு நமது விவசாய முறையே காரணம் எனத் தெளிவாக தெரிவதாக கூறுகிறார்.

மனித குல வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவு சுற்றுச்சூழல் அழிவு இடம்பெறுகின்றது.

எங்களின் ஆய்வில், பூச்சிகள் அழிந்து வருவது உறுதியாகியுள்ளது. இது நாம் முந்தைய காலங்களில் நினைத்ததைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. ஏனென்றால் காடுகளிலும் பூச்சி இனங்கள் அழிந்து வருகின்றன, என அவர் பி.பி.ஸி.யிடம் தெரிவித்தார்.

இந்த அழிவு, பயன்பாட்டில் உள்ள இடங்களில் ஏற்படுவது மட்டுமல்லாமல், சூழல் ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட இடங்களிலும் ஏற்பட்டு வருகிறது என்பதே மிகவும் கவலை கொள்ளக்கூடிய வியம். எனவே நமது பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கும் இடங்கள் என நாம் கருதுவது தற்போது நம்மைக் காக்கும் நிலையில் இல்லை என்பதே உண்மை.

அந்த ஆய்வுக்குழு, 2008ஆம் ஆண்டிலிருந்து 2017ஆண்டு வரை ஜேர்மனியில் உள்ள புல்வெளி மற்றும் காடுகளில் ஒரு மில்லியனிற்கும் அதிகமான பூச்சிகள், மற்றும் சிலந்திகளின் தகவல்களைப் பதிவு செய்தது.

அந்த தகவலின்படி புல்வெளிகள் மற்றும் காடுகளில் பூச்சிகளின் எண்ணிக்கை மிகப்பெரிய அளவில் குறைந்துள்ளது.

குறிப்பாகப் பூச்சிகள் எண்ணிக்கை குறையக் காரணம், அங்கு அதிகளவில் விவசாயம் செய்யப் படுவதால் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

சமீப ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்ட பிற ஆய்வுகளில், பூச்சிகள், தேனீக்களில் பல இனங்களில் பெரும் சரிவைச் சந்தித்துள்ளன. குறிப்பாக வளர்ந்த பொருளாதார மிக்க நாடுகளில் இது நிகழ்ந்துள்ளது என்று கூறப்படுகிறது.

இவை ஒருபக்கம் இருக்க, ஈக்கள் மற்றும் கரப்பான்பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இம்மாதிரியாகப் பூச்சிகளின் எண்ணிக்கை பெருமளவு குறைவது அதிகமாக விவசாயம் செய்தல், பூச்சிக் கொல்லி மருந்துகள், பருவநிலை மாற்றம் ஆகியவற்றால் ஏற்படுகிறது.

பூச்சிகளின் அழிவு ஒட்டு மொத்த சுற்றுச்சூழலின் அழிவாகும்.

இந்த பூச்சிகள் பல பறவைகள், நீர் மற்றும் நிலத்தில் வாழும் விலங்குகள், வௌவால்கள் மற்றும் பல்லிகள் ஆகியவற்றுக்கு உணவாக உள்ளவை. மேலும் தாவரங்களில் மகரந்த சேர்க்கை பூச்சிகளால்தான் நடைபெறுகிறது.

எனவே பூச்சிகளின் அழிவு என்பது சுற்றுச்சூழலில் ஏற்படக்கூடிய மிகப்பெரிய அழிவின் தொடக்கம் என்கின்றனர் சுற்றுச்சுழல் ஆர்வலர்கள்.



## வரிதண்டுபவரின் செபம்

தன் ஏழ்மையை – பாவநிலையை – இறைவனுக்கு முன் உணர்வதில் வரிதண்டுபவரின் செபம் ஆரம்பமானது என்று கூறிய திருத்தந்தை, இவரது செபம் உள்ளத்திலிருந்து உருவானது என்பதையும், அதனால், இறைவனுக்கு விருப்பமாக அமைந்தது என்பதையும் எடுத்துரைத்தார். தனது நிலையைக் குறித்து எவ்வித தவறான மதிப்பீடுகளும், சாக்கு போக்கும், சொல்லாமல், உள்ளதை உள்ளவாறே கூறிய வரிதண்டுபவரின் செபம், இறைவனை நோக்கி உயர்ந்தது என்று திருத்தந்தை குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## ஏழையின் செபம்

மற்றவர்களோடு தங்களை ஒப்பிடாமல், இறைவனே தங்கள் செல்வம் என்பதை உணர்ந்தவர்களாய், ஏழைகள் எழுப்பும் செபம், முகில்களை ஊடுருவிச் செல்லும், இறைவனை நேரில் சென்றடையும் என்பதை சீராக்கின் ஞானம் கூறுகிறது. ஏழைகளின் குரலோடு நமது குரலையும் இணைத்துச் செபிக்கும்போது, நமது செபங்களும் முகில்களை ஊடுருவிச் சென்று, இறைவனிடம் சேரும் என்று கூறி, திருத்தந்தை தன் மறையுரையை நிறைவு செய்தார்.

# திருத்தந்தையின் தாய்லாந்து பயணம் அங்கு பெரும் உந்துசக்தியாகவே அமையும்

## திருப்பீடத் தூதர் பேராயர் நம்பிக்கை




தாய்லாந்து நாட்டில், உண்மையான மனித விழுமியங்களுக்கு முதலிடம் கொடுத்து, நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப, திருத்தந்தையின் வருகை பெரும் உந்துசக்தியாக அமையும் என்று, அந்நாட்டின் திருப்பீடத் தூதர், பேராயர் ஆசிய செய்தியிடம் கூறியுள்ளார். நவம்பர் 20 ஆம் திகதி முதல், 23 ஆம் தேதி முடிய, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தாய்லாந்தில் மேற்கொள்ளும் திருத்தூதுப் பயணத்தைக் குறித்த செய்தி, நாட்டு மக்களிடையே, பெருமளவு நேர்மறையான உணர்வுகளை எழுப்பி வருகிறது என்று பேராயர் கூறினார்.

1984 ஆம் ஆண்டு, திருத்தந்தை புனித 2ஆம் ஜோன்பால் அவர்கள் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்ட வேளையில், அவரை, கத்தோலிக்கர்களின் தலைவர் என்று மட்டும் கருதிய அடிப்படைவாத புத்த குழுவினர் எதிர்ப்பு தெரிவித்தனர் என்பதை நினைவு கூர்ந்த பேராயர் தற்போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, உலகின் ஆன்மீகத் தலைவர்களில் ஒருவராக தாய்லாந்து மக்கள் கருதுவதால், அவரை வரவேற்கக் காத்திருக்கின்றனர் என்று எடுத்துரைத்தார். 1669 ஆம் ஆண்டு, சியாம் அப்போஸ்தலிக்க விகாறேட் நிறுவப்பட்டதன் 350 ஆம் ஆண்டு நிறைவடையும் வேளையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அந்நாட்டிற்கு வருகை தருவது, வரலாற்று சிறப்பு மிக்கது என்று, பேராயர் சுட்டிக்காட்டினார்.


கடந்த 350 ஆண்டுகால வரலாற்றில், தாய்லாந்து கத்தோலிக்கத் திருஅவை 11 மறைமாவட்டங்களாக வளர்ந்துள்ளது என்பதும், புத்த மதத்தினர் பெரும்பான்மையாக வாழும் அந்நாட்டில், ஏறத்தாழ 3,90,000 கத்தோலிக்கர் வாழ்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கன. 2018 ஆம் ஆண்டு, மே மாதம், தாய்லாந்து நாட்டிலிருந்து வத்திக்கானுக்கு சென்ற 50 புத்த மதத் துறவிகள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்தமையும், புத்த திருமறையின் மொழிபெயர்ப்பு அடங்கிய பழமை வாய்ந்த நூல் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கியமையும், இந்த திருத்தூதுப் பயணத்திற்கு அடித்தளமாக அமைந்தன என்று ஆசிய செய்தி கூறியுள்ளது.

## ஒக்ரோபர் மாதத்தில் கொண்டாடப்பட்ட சிறப்பு மறைப்பணி நடவடிக்கைகள்

திருத்தந்தை 15 ஆம் பெனடிக் அவர்கள் வெளியிட்ட திருத்தூது மடலின் நூறாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், சிறப்பு மறைப்பணி மாதமாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு மறைப்பணி மாதத்தில் மாபெரும் பணியாற்றிய எல்லாருக்கும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நன்றி தெரிவித்தார் என்று, திருப்பீட நற்செய்தி அறிவிப்பு பேராயத் தலைவர், கர்தினால் அவர்கள் கூறினார்.

உரோம் நகரிலுள்ள உலகளாவிய மறைப்பணி வழிகாட்டுதல் மையம் நடத்திவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளும், பாப்பிறை மறைப்பணிக் கழகங்களின் உறுப்பினர்களிடம் இவ்வாறு கூறினார் கர்தினால் பிலோனி.

உலகஅளவில், எல்லாக்கண்டங்களிலும், கத்தோலிக்க குழுக்கள், மறைமாவட்டங்கள், பங்குத்தளங்கள், பக்த சபைகள், திருஅவை அமைப்புகள் போன்ற அனைத்திலும், செபங்கள், திருவழிபாடுகள், சாட்சியங்கள் போன்ற பல நிகழ்வுகளால், இந்த ஒக்டோபர் சிறப்பு மறைப்பணி மாதம் கொண்டாடப்பட்டது.



# திருத்தந்தையின் அருள்பணி ஐம்பது ஆண்டுகள் நிறைவு

## நினைவாக 2 முத்திரைகள் வெளியீடு

இவ்வாண்டு டிசம்பர் 13 ஆம்திகதி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அருள்பணியாளராக அருள்பொழிவு பெற்றதன் 50 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பிக்கப்படுவதையொட்டி, நவம்பர் 4, கடந்த திங்கள், அவரது உருவங்கள் பதிக்கப்பட்ட இரு தபால் தலைகளை, வத்திக்கான் தபால் துறை வெளியிட்டுள்ளது.

1969ஆம் ஆண்டு, டிசம்பர் 13 ஆம் திகதி, அருள்பணியாளராக அருள்பொழிவு பெற்ற இளையவர் ஹோர்கே மாரியோ பெர்கோலியோவின் மகிழ்ச்சி நிறைந்த ஓர் உருவம் முதல் தபால் தலையில் பதிக்கப்பட்டுள்ளது.

இந்த உருவத்திற்குப் பின்னணியில், இளையவர் பெர்கோலியோ தன் அழைப்பை உணர்ந்த புனித யோசேப்பு பசிலிக்காவின் உருவம் ஓர் புறமும், அருள்பணி பெர்கோலியோ அவர்கள் மிகுந்த பக்தி கொண்டிருந்த முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னை மரியாவின் உருவம் மறுபுறமும் வரையப்பட்டுள்ளன. இரண்டாவது தபால் தலையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உருவம் முன்னிலையிலும், புனித பேதுரு பசிலிக்கா மற்றும் இறை இரக்கத்தின் கிறிஸ்து ஆகிய உருவங்கள் பின்புலத்திலும் வரையப்பட்டுள்ளன.

1936 ஆம் ஆண்டு, டிசம்பர் 17 ஆம் திகதி பிறந்த ஹோர்கே மாரியோ பெர்கோலி யோ, தன் 33 ஆவது வயதில் அருள்பணியாளராகவும், 56 ஆவது வயதில் ஆயராகவும் அருள்பொழிவு பெற்று, 2013 ஆம் ஆண்டு, தன் 77 ஆவது வயதில் திரு அவையின் தலைவராகப் பொறுப்பேற்றார். 83 வயதான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசு சபை துறவியாக 61 ஆண்டுகளையும், ஓர் அருள் பணியாளராக, 50 ஆண்டுகளையும் நிறைவு செய்துள்ளார்.

# இறந்தோருக்காக நவம்பரில் செபிக்க திருத்தந்தை அமைப்பு

நவம்பர் 6 இப்புதனன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய மறைக்கல்வி உரையின் இறுதியில், இந்த நவம்பர் மாதத்தில் இறந்தோருக்காக செபிக்க அழைக்கப்பட்டுள்ளோம் என்று குறிப்பிட்டமையை, அவர் தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டுள்ளார்.

“அன்பு நண்பர்களே, இந்த நவம்பர் மாதம் இறந்தோருக்காக செபிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நம் குடும்பங்களில், நண்பர்களில் மற்றும் தெரிந்தவர்களில் இறந்தோரை, சிறப்பாக, திருப்பலி வழியே, இறைவனிடம் ஒப்படைப்போம்”.– என்ற சொற்களை, திருத்தந்தை, தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டார்.

மேலும், நவம்பர் 17 ஆம் திகதி, பொதுக்காலத்தின் 33 ஆம் ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் வறியோர் உலக நாளையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், காலை 10 மணிக்கு திருப்பலியாற்றுவார் என்று திருப்பீட வழிபாட்டுத் துறை அறிவித்துள்ளது.

அத்துடன், நவம்பர் 9, உரோம் நகரில் உள்ள இலாத்தரன் பசிலிக்கா பேராலய நேர்ந்தளிப்பு விழா சிறப்பிக்கப்படுவதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்பேராலயத்தில், மாலை 5.30 மணிக்கு ஆடம்பரத் திருப்பலியொன்றைத் தலைமையேற்று நடத்தினார் என்று, உரோம் மறைமாவட்டம் அறிவித்துள்ளது.




இந்த பசிலிக்காவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மறையுரை மேடை ஒன்றையும், புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள சிலுவையில் அறையுண்ட இயேசுவின் திருஉருவத்தையும் திருத்தந்தை அர்ச்சிப்பார் என்றும், இந்த நேர்ந்தளிப்பு விழாவுக்கென உருவாக்கப்பட்டுள்ள புதிய செபங்களை திருத்தந்தை முதல் முறையாகப் பயன்படுத்தினார் என்றும் உரோம் மறைமாவட்ட அறிக்கை கூறுகிறது.

சர்வதேச கணக்கீட்டு தினம் இன்று நவம்பர் 10 ஆம் திகதி கொண்டாடப்படுவதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

# சர்வதேச கணக்கீட்டு தினம்



# நிறுவனங்கள் தொடர்பான உலகளாவிய மொழி கணக்கீடு

சர்வதேச கணக்கீட்டு தினம் (International Accounting Day) ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

கணக்கீடு என்பது நிறுவனம் தொடர்பான உலகளாவிய மொழி என்பதில் சந்தேகமில்லை. பொதுவாக நிறுவனம் தொடர்பாகவும் நிறுவனத்தின் பெறுமானம் தொடர்பாகவும் சரளமாக பேசுபவர்கள் கணக்காளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அதேவேளை கணக்கீடு என்பது வியாபாரத்தின் ஒரு மொழியாவதோடு ஒரு நிறுவனத்



தின் நிதி ரீதியான செயற்பாடு மற்றும் நிதி நிலைமை என்பனவற்றை நிதிக்கூற்றுக்களை பயன்படுத்தும் தரப்பினர்களுக்கு எடுத்துக்கூறுகிறது.

ஏனைய மொழிகளினை போன்றே கணக்கீடும் அதற்குரிய சிக்கலான சட்ட விதிமுறைக ளின் தொகுதியை கொண்டதாகும். நிதிக்கூற்றுக் களை தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் அடிப்படை மரபுகள் அல்லது சட்ட விதிகள் நடைமுறையிலுள்ள கணக்காளர்களின் பல ஆண்டு சேவையின் போது கிடைத்த அனுபவத்தினால் எழுந்தவையா கும். நிதிக்கூற்றுக்கள் அதன் பாவனையாளர்களால் வேண்டப்படும் தகவல்களை வழங்கக் கூடியனவாக உள்ளமையோடு அத்தகைய தகவல்கள் நடைமுறை நிதிநிலைமைச் செயற்பாடு மற்றும் நிதிநிலைமையில் ஏற்படும் மாற்றம் என் பற்றைக்காட்டுவதாகவும் அமையும். இதனடிப் படையில், சர்வதேச கணக்கீட்டு தினமானது மக் கள் ஈடுபட விரும்பும் மிகவும் சவாலானமற்றும்மனஅழுத்தத்தைஏற்படுத்தக்கூடிய தொழில்துறை யான கணக்கீட்டுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.

பல நாடுக ளில் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் நிதி மற்றும் நிதி உத்திக்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்காகக் கணக்காளர்களை நினைவுகூரும் நிகழ்வாக இந்த தினம் வெவ்வேறு சமூகங்களில், நிறுவனங்களில், மற்றும் நாடுகளில் நவம்பர் மாதம் 10ஆம் திகதி அதிகாரபூர்வமாக கொண்டாடப்படுகின் றது.

கணக்காளர் தினத்தின் முக்கிய நோக்கம் கணக்கீட்டு தொழிலை மேம்படுத்துவதாகும். அத் துடன் சமூகப் பார்வையில் கணக்காளர்களின் பங்கின் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்க இத்தினம் அனுமதிக்கிறது. நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் நிதி விவகாரங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அனுமதிக்கும் பொருளாதார செழிப்பில் கணக்காளர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

இன்று சிக்கலான நிறுவன கட்டமைப்புகள் கணக் காளர்களிடமிருந்து உயர்தர வேலைக்கு அழைப்பு விடுக்கின்றன. எனவே, இந்த நிறுவனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கணக்காளர்கள் பெரும் சவால்களையும் அழுத்தங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. நிறுவனங்கள் நம்பகமான மூல தன சந்தையை உருவாக்குவதற்கு கணக்காளர்கள் பெரும் பங்களிப்பை வழங்கவேண்டியிருக்கின் றது.

பெரும்பாலான நிறுவனங்கள் உலகளாவிய ரீதியில் வியாபித்து செல்வதால் கணக்காளர்கள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆளுகை, ஒத்திசைவு மற்றும் வணிக நடவடிக்கைகள் என்பவற்றை சீராக நடத்துவதற்கு அன்றாடம் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இத்த கையை கணக்காளர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக இந்த தினம் கொண்டாடப்படுகின்றது.

இத்தினமானது முதன்முதலில் 1972ஆம் ஆண்டில் கணக்கீட்டு தொழிலை மேம்படுத்துவதற்காக 'கணக்கீட்டு தொழில் நாள்' எனக் கொண்டாடப்பட்டது. அதாவது 1494 நவம்பர் 10ஆம் திகதி இரட் டைப் பதிவு குறித்த முதல் புத்தகத்தை வெளியிட்ட இத்தாலிய கணிதவியலாளர் லூகா பேசியோலியின் நினைவாக இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எனினும் ஏறக்குறைய 1300ஆம் ஆண்டு வரை இரட்டைப்பதிவு கணக்கீட்டு முறை கண்டு பிடிக்கப்பட வில்லை. அதன்பின் ஐரோப்பா முழுவதும் இம்முறை தொடர்பான அறிவு பரவத் தொடங்கியது. தொடர்ந்து அது உலகம் முழுவதும் பரவியது. 1976 ஆம் ஆண்டில் இந்தப்பெயர்' சர்வதேச கணக்கீட்டு நாள்' என்று உருவானது. ஆண்டு தோறும் பல்வேறு நிறுவ னங்கள் சமூகங்கள் மற் றும் நாடுகள் இந்த நாளை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றன.

கணக்கீடு தொடர்பான சேவை வழங்கும் தொழில் சார் நிபுணத்துவ கணக்காளர்கள் பொதுவாக பல எண்ணிக்கையான பயன்பெறும் தரப்பினர்களுக்காக வேலை புரிகின்றனர். வழங்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பயன்பெறும் தரப்பினர்களுக்கு கணக்குகளைத் தயாரிக்கும் நடவடிக்கையில் அல்லது ஒரு தொகுதி கணக்குகளை மீளாய்வு செய்வதில் ஈடுபடுகிறார்கள்.

வரையறுக்கப்பட்ட வளங்களிலிருந்து உச்சமான பயனைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் நிறுவனத்திலுள்ள வளங்கள் மற்றும் அவற்றில் ஏற்படும் மாற்றம் என்பன பற்றி அறிக்கை பேணும் கருமம் கணக்கீட்டின் அடிப்படையான தேவை யாகும். இது நீண்ட வரலாறு கொண்ட ஒரு பொறிமுறை யாகும். கணக்கீட்டின் வளர்ச்சி யானது பலபரிமாணங்களில் இன்று பரந்து விரி வடைந்துள்ளது. கணக்காளர்கள் நிறுவனத்தின் முக்கியமான கருமத்தை நிறைவேற்றும் அங் கத்தவர்களாக உள்ளார்கள். நிறுவனத் தீர்மானம் மேற்கொள்ளலில் நிதி அறிக் கையிடல் கட்டாயமான காரணியாக உள்ளது.

நிறுவனங்களின் பெறுபேறுகளை அல்லது நிதிநிலைகளை வெளிபடுத்தலுக்கான நிதி அறிக்கையிடல் கருமம் கணக்கீட்டு துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான பொறுப்பாகும். நிதி அறிக்கைகளைப் பரிசீலனை செய்து அத்தகவல்களை அடிப்படையாகக் கொள்ளும் நிறுவனத்தின் மீது அக்கறை கொண்ட பல்வேறு தரப்பினர் பல்வேறு விதமான பொருளாதாரத் தீர்மானங்களை மேற் கொள்கிறார்கள். நிதிக்கூற்றுக்களை பரிசீலிப்பவர்கள் நிதிக்கூற்றுக்கள் மிகவும் சரியானவை மற்றும் அவை நியாயமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்று கருதுகின் றார்கள்.

நிதி அறிக்கையிடலில் நிறுவனம் தொடர்பான தக வல்கள் சரியாகவும் மிக விரைவாகவும் நிதிக்கூற்றுக்களைப் பரிசீலிப்பவர்களுக்கு சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். நிதி அறிக்கையிடல் மூலமாக வழங்கப்படும் வணிகத் தகவல்கள் வெவ்வேறு தரப்பினர்களுக்கு வணிகத்தை பற்றிய தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவியளிக்கின்றன. இதனால் கணக்கீட்டில் தயாரிக்கப்படுகின்ற நிதி அறிக்கைகள் நம்பகமாகவும் ஒப்பிடக்கூடிய னவாகவும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் கணக்காளர்களுக்கு ஒப்படைக்கப்பட்



டுள்ள பொறுப்பாகும்.

கணக்கீட்டின்வளர்ச்சியுடன்நிதிஅறிக்கையிடலை மேம்படுத்துவதற்கு பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உயர் தொழில் நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன.

இதனால் கணக்கீடு தொடர்பான எண்ணக்கரு ரீதியான சட்டகம் வெவ்வேறு நாடுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணக்கரு ரீதியான சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த நாடுகளில் தத்தமது பூகோள வலயத்துக்குள் பின்பற்ற வேண்டிய கணக்கீட்டு நியமங்களை அறிமுகம் செய்துள்ளன. இந்த கணக்கீட்டு நியமம் காலத்துடன் சர்வதேச ரீதியாக பொது அங்கீகாரம் கொண்ட கணக்கீட்டு நியமமாக பிரசுரிக்கப்படுவதற்கு உயர் தொழில் நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

கணக்கீடு சரியான தரம் கொண்டதாக பேணப்பட வேண்டும். அவ்வாறில்லாத போது அதன் மூலமாக நிறுவனம் பற்றிய அக்கறை கொண்ட தரப்பினருக்கு மட்டுமன்றி முழுமையான பொருளாதாரத்துக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத் தும். இதனடிப்படையில் நிறுவனத் தின் தொழில்முறை கணக்காளர்கள் என்பது அந்நிறுவனத்தின் சொத்தாக அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

நிறுவனங்களின் உரிமையாளர்கள் தமது முதலீடு தொடர்பாக நியாமான, நம்பிக்கையான நிதி தகவல்களை கணக்காளர் வழங்குவார் என்று நம்பியிருப்பதுடன் அவற்றை பொருளியல் தீர்மானங்களுக்கு அடிப்படையாகவும் பயன்படுத்துகிறார்கள். தொழில் சார் நிபுணத்துவ கணக்காளர் தமது வாடிக்கையாளர் அல்லது தொழில் கொள்வோரை திருப்திப் படுத்தக்கூடிய விதத்தில் மட்டும் செயற்படாமல் பொது மக்களின் நலன் தொடர்பாகவும் செயற்பட வேண்டிய பொறுப்பை கொண்டுள்ளனர். தொழில் சார் நிபுணத் துவக் கணக்காளர்களால் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுகள் நிறுவனத்தின் நிதிநிலை மற்றும் நிதிச் சாதனை உண்மையாகவும் நியாயமாகவும் இருக்குமென அதன் பயன்பெறும் தரப்பினரால் நம்பப்படுகின்றது. எனவே இந்த சர்வதேச கணக்கீடு நாளில் உலகெங்கிலும் உள்ள அனைத்து கணக்காளர்களுக்கும் கணக்கீட்டு தொழில்சார்ந்தோருக்கும் அவர்களின் கடின உழைப்பையும் அர்ப்பணிப்பை யும் பாராட்டி நினைவு கூர்கிறோம்.

கலாநிதி பு.பிரதீப்காந்
(கணக்கீட்டு துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

காலைக்கதிர் Kalaikathir



# ரி -20 தொடரை வென்றது ஆஸ்திரேலியா!

பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி -20 போட்டியில், ஆஸ்திரேலியா அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி -20 தொடரை, ஆஸ்திரேலியா 2 -0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. இரு அணிகளுக்கிடையிலான முதலாவது போட்டி மழைக் காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பேர்த் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 106 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, இப்தீகார் அஹமட் 45 ஓட்டங்களையும், இமாம் உல் ஹக் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஆஸ்திரேலியா அணியின் பந்துவீச்சில், கேன் ரிச்சட்சன் 3 விக்கெட்டுகளையும், மிட்செல் ஸ்டாக் மற்றும் சீன் அபோட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஆஷ்டன் அகர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 107 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி, 11.5 ஓவர்கள் நிறைவில் எவ்வித விக்கெட்டும் இழப்பின்றி, வெற்றி இலக்கை கடந்தது. இதனால் ஆஸ்திரேலியா அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

இதன்போது, டேவிட் வோர்னர் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும், ஆரோன் பின்ஞ் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆஸ்திரேலியா அணியின் பந்துவீச்சாளர் சீன் அபோட் தெரிவு செய்யப்பட்டார்.

ஏற்கனவே சொந்த மண்ணில் வைத்து இலங்கை அணியை வெள்ளையடிப்பு செய்த ஆஸ்திரேலியா அணி, தற்போது சொந்த மண்ணில், பாகிஸ்தானையும் பதம் பார்த்துள்ளது.



# தலைவராகத் தொடர்வதற்கு ரிம் பெய்ன் சரியான தெரிவு



ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் மற்றும் விக்கெட் காப்பாளராகத் தொடர்வதற்கு ரிம் பெய்ன் சரியான தெரிவு என தான் நம்புவதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய அணியின் தலைவராக விளங்கிய ஸ் ரீவ் ஸ்மித், ஓராண்டு தடைக்கு முகம் கொடுத்தார்.

இதனால், ஆஸ்திரேலிய அணியின் டெஸ்ட் தலைமைப் பொறுப்பு ரிம் பெய்னுக்கு வழங்கப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற ஆஸி தொடரில் 10 இன்னிங்ஸ்களில் விளையாடிய ரிம் பெய்ன் ஒரேயொரு அரைச்சதத்தை மட்டுமே பெற்றிருந்தார்.

ஆனால், தடையின் பின் அணிக்கு மீளத்திரும்பிய ஸ்டீவ் ஸ்மித் மூன்று சதங்கள், மூன்று அரைச்சதங்கள் உட்பட 774 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதனையடுத்து, ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைமைப் பொறுப்பு ஸ்மித்துக்கு வழங்கப்படவேண்டும் என்ற விமர்சனம் எழுந்தது.

இந்நிலையில் இது பற்றி நேற்றுமுந்தினம் மும்பையில் கருத்து வெளியிட்டுள்ள ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட், 'ஸ்மித்துக்குப் பின்னர் ஆஸ்திரேலிய அணியில் ஏற்பட்ட வெற்றிடத்தை ரிம் பெய்ன் சிறப்பாக நிரப்பினார். தற்போது உள்ள விக்கெட் காப்பாளர்களில் அவர் தலைசிறந்தவர். அணியின் சக வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளருடன் அவர் நல்ல உறவில் உள்ளார். அணியை 12 மாதங்கள் சிறப்பாக கட்டிக்காத்துள்ளார். அவரை அணியை விட்டு நீக்குவதற்கான எந்தவொரு நிர்ப்பந்தத்தையும் நான் காணவில்லை – எனக் குறிப்பிட்டார்.

# ஆஸ்திரேலியாவின் ஸ்மித் ஒரு தனி ரகம்

நுட்பமும் ஸ்டைலும் இல்லாமல் விளையாடும் அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணியின் ஸ் ரீவ் ஸ்மித், ஒரு தனி ரகம் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் கூறியுள்ளார்.

சமீபத்தில் வெளியிட்டுள்ள யூ ரியூப் காணொளியில் இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறுகையில் –

ஸ் ரீவ் ஸ்மித் இப்படி துடுப்பெடுத்தாடுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஸ் ரீவ் ஸ்மித் திடம் நுட்பம் இல்லை, ஸ்டைலும் இல்லை. ஆனா



லும் அவர் சிறப்பாகத் திகழ்கிறார்.

அவர் எப்படி சிறப்பாக துடுப்பெடுத்தாட முடிகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. என் காலத்தில் அவர் விளையாடியிருந்தால் நிச்சயம் என் பந்தில் காயமடைந்திருப்பார். அவரைக் காயப்படுத்த நான் முயற்சி செய்திருப்பேன்.

ஆனால் அவர் விளையாடுவதைப் பார்த்தால் காயப்படுத்துவதும் முடியாத காரியம் என்று தெரிகிறது. மிக நன்றாக விளையாடுகிறார், இப்படி விளையாடுவதில் இவர் ஒரு தனி ரகம்' என கூறினார்.

பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்திற்கு பிறகு ஓராண்டு தடையிலிருந்து மீண்டு வந்த ஸ்டீவ் ஸ்மித், தற்போது களத்தில் சிறப்பாக ஆடி வருகிறார்.

நடைபெற்று முடிந்த ஆஸ் தொடரில் ஓட்டங்களை அள்ளிக்குவித்து பல சாதனைகளை பதிவு செய்த ஸ்மித், தற்போது நடைபெற்று வரும் பாகிஸ்தான் அணிக்கெதிரான ரி -20 தொடரிலும் அபாரமாக துடுப்பெடுத்தாடி வருகிறார்.

# கிரேன் பொலாட் வினைத்திறனுள்ளவர்

அணித்தலைவராக கிரேன் பொலாட் வினைத்திறன் மிக்கவர் என மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் வீரர் விவியன் ரிச்சார்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியுடனான படுதோல்வியை அடுத்து மேற்கிந்திய தீவுகளின் அணித் தலைமையில் மாற்றம் கொண்டு வரப்பட்டது.

அதன்படி இதுவரை காலமும் மேற்கிந்திய தீவுகளின் மூன்று வகையான கிரிக்கெட்டுக்கும் அணித் தலைவராக திகழ்ந்த ஜேசன் ஹோல்டர் டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டும் தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஒருநாள் மற்றும் ருவென்ரி 20 அணிகளுக்கான தலைமை சகலதுறை வீரரான கிரேன் பொலாட்டுக்கு வழங்கப்பட்டது.

இதற்கென, கடந்த 3 வருடங்களின் பின்னர் அவர் அணிக்கு மீள அழைக்கப்பட்டிருந்தார். கரீபியன் பிறீமியர் லீக் உள்ளிட்ட கழக மட்டப்போட்டிகளில் அவர் வெளிப்படுத்திய சிறந்த பெறுபேறுகளே அவரை அணித்தலைராக காரணமாக அமைந்தது.

தற்சமயம் ஆப்கானிஸ்தான் அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி பங்கேற்றுள்ளது.

இந்நிலையில், பொலாட்டின் தலைமைத்துவம் குறித்து மனம் திறந்த விவியன் ரிச்சார்ட்ஸ், 'அவர் சிறந்த தலைமைத்துவ பண்புகளைக் கொண்டவர் என்பதை சி.பி.எல் தொடரின் முதல் பருவகாலத்திலேயே உணர்ந்து கொண்டேன். பொலாட் ஏனைய தலைவர்களை விட வினைத்திறன் மிக்கவர். அவருக்கு இப்பொழுது சிறந்த இடம் கிடைத்திருக்கிறது. அதனை



பொலாட் சரிவரப்பயன்படுத்திக்கொள்வார்' என்றார்.

பொலாட் தலைமையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியை மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# நம் மூதாதையர்கள் இரு கால்களில் நடக்க ஆரம்பித்தது எப்போது?

பரிணாம வளர்ச்சி குறித்து எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

முதன் முதலாக இரண்டு கால்களில்நடக்கஆரம்பித்ததுஎப்போது, எப்படி என்று அறிந்து கொள்ளும் நோக்கில், பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதக் குரங்கின் புதைப்படிமங் களில் செய்யப்பட்ட ஆய்வுகள் மூலம் சில விடயங்கள் தெரியவந்துள்ளன.



நிமிர்ந்து நடப்பது என்பது மனித இனத்தின் ஒரு முக்கிய அடையாளம்.

குரங்குகளின் கைகள் மரத்தில் தொங்குவதற்கு ஏற்றவாறு இருக்கும். ஆனால், அவற்றுக்கு மனிதனை போன்ற கால்கள் இருக்கும்.

சுமார் 1.2 கோடி ஆண்டுகளுக்கு முன்பே, குரங்குகள் மரக்கிளைகளிலும், நிலத்திலும் நடந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகளில் 60 லட்ச ஆண்டுகளுக்கு முன்பிலிருந்துதான் நிமிர்ந்து நடக்கும் பழக்கம் உருவானதாகக் கருதப்பட்டது. ஆனால், இது அதற்கு முன்னரே நடந்திருப்பதை இப்போதைய ஆய்வு காட்டுகிறது.

5,300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பனிமனிதன் கடைசியாக பயணித்த பாதை எது?

2015 மற்றும் 2018ஆம் ஆண்டிற்கு இடையே ஜெர்மனியில் உள்ள பவேரியாவில், ஒரு களிமண் குழியில் இருந்து நான்கு புதைப்படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு ஆண் குரங்கு, இரு பெண் குரங்குகள் மற்றும் ஒரு குட்டிக் குரங்கு ஆகியவற்றின் உடல்கள் கிடைத்தன.

தெற்கு ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட இவை பரிணாம வளர்ச்சி குறித்த ஆராய்ச்சியில் ஒரு மைல்கல். மனிதக் குரங்குகள் மற்றும் மனிதர்களின் வளர்ச்சியில் நமக்கு இருக்கும் முந்தைய புரிதல் குறித்து இவை அடிப்படை கேள்விகளை எழுப்புகின்றன, என்கிறார் டூபிங்கன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் மடேலைன் போஹ்மி.

**இரு கால்களில் நடக்க ஆரம்பித்தது எப்போது?**

நம் மூதாதையர்கள் இரு கால்களில்நடக்கத்தொடங்கியதுஎப்போது என்பது குறித்த பெரும் விவாதம் பலஆண்டுகளாக இருந்துவருகிறது.

மனிதர்கள் இரண்டு கால்களில் நடக்கக்கூடிய குணம் குரங்குகளிடம் இருந்து வந்ததா? மரங்களில் வாழ்ந்த ஓராங்குட்டான் அல்லது நிலத்தில் பெரும் நேரத்தை செலவழித்த மனிதக்குரங்கு அல்லது கொரில்லா குரங்கு போன்றவற்றிடம் இருந்து வந்ததா?

நேச்சர் என்ற அறிவியல் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட புதிய ஆய்வின்படி, மனிதக் குரங்குகள் மற்றும் மனிதர்களின் பொதுவான மூதாதையர்களிடம் இருந்து நாம் நிமிர்ந்து நடக்கும் பழக்கம் வந்திருக்கலாம். முன்னதாக ஆபிரிக்காவில் இந்த மூதாதையர்கள் வாழ்ந்திருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால் இந்த ஆய்வறிக்கையின்படி அவர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்திருக்கிறார்கள்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட புதைப்படிவங்களை ஆய்வு செய்ததில், ஒரு கோடி 62 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த Danuvius guggenmosi எனும் அறிவியல்பெயர்கொண்ட மனிதக்குரங்குகள், இரு கால்களில் நேராக நிமிர்ந்து நடந்துள்ளன என்றும் மரத்தில் ஏறும்போது அவை மூட்டுகளை பயன்படுத்தியுள்ளன என்றும் தெரிய வந்துள்ளது.

சுமார் ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன்பு, மரங்களில்தான் இரு கால்களில் நடக்கும் பழக்கம் உருவானதாக இந்த ஆய்வுகள் கூறுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**பல கோடி ஆண்டுகளுக்கு முன் மனிதக்குரங்குகள் எப்படி இருந்தன?**

ஆண் மனிதக்குரங்குகளின் எலும்புக்கூட்டை ஆராய்ந்ததில், அவை சுமார் ஒரு மீட்டர் உயரமும், 31 கிலோ எடையுடன் இருந்திருக்கலாம் என்று தெரிய வந்துள்ளது.

பெண் மனிதக்குரங்குகள், சுமார் 18 கிலோ எடையுடன் இருந்திருக்கலாம். இன்று இருக்கும் எந்த மனிதக்குரங்குகளின் எடையைவிட இது மிகக் குறைந்ததே ஆகும்.

மூட்டு எலும்புகள், முதுகெலும்புகள், கைவிரல் மற்றும் கால்விரல் எலும்புகளைக் கொண்டு, அவை எப்படி நடந்திருக்கக் கூடும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மனிதக்குரங்கின் உடல்களில் இருந்த சில எலும்புகள், மனித எலும்புகள் போன்று இருப்பதைக் கண்டுநாங்கள்வியந்தோம்என்கிறார் பேராசிரியர் போஹ்மி.

மனிதர்கள் எப்படி இரு கால்களில் நடக்க ஆரம்பித்தனர் என்பதை தெரிந்து கொள்வது, நம் பரிணாம வளர்ச்சியின் பல அடிப்படை கேள்விகளுக்கு பதில் அளிக்கும்.

மனிதர்களின் வளர்ச்சியில், நேரமாக நிமிர்ந்து நடப்பது என்பது ஒரு முக்கிய மைல்கல். அதுவே, தொடுதல், கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற முக்கிய வாய்ப்புகளுக்கு வழிவகுத்தது.



ஹெலன் பிரிக்ஸ்
பி.பி.சி.

ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து முன்வைத்திருந்த – தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் சம்பந்தமான – இணக்க முயற்சி வெற்றியளிக்காமல் போனமை தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாட்டை அந்த எத்தனங்களில் பங்குபற்றிய அக்கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் அ.அருந்தவபாலன் அறிக்கை மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

# 13 அம்சக் கோரிக்கைகளும் 5 கட்சிகளின் நிலைப்பாடும்!

## தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியின் கொள்கை பரப்பு செயலரின் கருத்து

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு பேரம் பேசுவதற்கு பலத்துடன் செல்லவேண்டும் என்ற நன்நோக்கின் அடிப்படையில் பல்கலைகழக மாணவர்கள் எடுத்த முயற்சிகளை நாம் உயர்வாகவே மதிக்கிறோம். அவ்வகையிலேயே எமது பூரண ஒத்துழைப்பை அவர்களுக்கு இறுதி வரை வழங்கினோம்.

இதனால்தான் கூட்டம் இரத்துச் செய்யப்பட்ட தகவல்கள் கூட எமக்கு உரிய நேரத்தில் கிடைக்காத நிலையில் அன்றைய கூட்டத்துக்கும் சென்றிருந்தோம்.

மாணவர்களின் இந்த முயற்சி வெற்றி பெறாமல் போனமைக்கான முழுப் பொறுப்பும் தமிழரசுக் கட்சியைச் சார்ந்திருக்கும் நிலையில் அதனை மாணவர்கள் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டாது 'ஐந்து கட்சிகள்' என்ற வகையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கின்றமை கவலையளிக்கிறது. நடந்ததைத் தெளிவாக மக்களுக்குச் சொல்ல வேண்டிய கடப்பாடு மாணவர்களுக்கு உள்ளது என நாம் கருதுகிறோம்.

ஆரம்பம் முதலே பொதுவான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி முட்டுக்கட்டை போட்டு வந்ததுடன், காலத்தை இழுத்தடிக்கும் உத்தியையே கையாண்டு வந்தது. சஜித்தை ஆதரிப்பது என்று ஏற்கனவே அக்கட்சி எடுத்துக் கொண்ட தீர்மானத்தை ஐந்துகட்சிகளின் முடிவாக அறிவிப்பதே அவர்களது இலக்காக இருந்தது என்பதை மாணவர்கள் நன்கு அறிவர். உண்மையில் ஒப்புக்காகவே குறித்த 13 அம்சக் கோரிக்கைகளில் அவர்கள் ஒப்பமிட்டனர்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக வேட்பாளர்களுடன் பேசுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சுமந்திரன் அது தொடர்பாக எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. மாறாக நாங்கள் அவர்களுடன் பேச வேண்டிய அவசியமில்லை என சுமந்திரனும், இந்தக் கோரிக்கைகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தொடர்பில்லை எனச் சம்பந்தனும் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

இறுதியில் எமது கட்சியே இக்கோரிக்கைகளை வேட்பாளர்களுக்கு உத்தியோக பூர்வமாகச் சமர்ப்பித்து உரையாடுவதற்கான நேரத்தைக் கேட்டிருந்தது.

எந்தவொரு வேட்பாளரும் எமது கோரிக்கைகள் ஏற்காதவிடத்து எவருக்கும் ஆதரவளிப்பதில்லை என்பதே ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவு.

ஆனால் இதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் உடன்பட மறுத்தமையுடன், தாங்கள் ஒருவருக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டி வரும் என்பதையும் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார். இதற்கு எமது கட்சியும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் ஒரு போதும் உடன்பட முடியாது என்பதை 26ஆம் திகதிக் கூட்டத்தில் உறுதியாகவே குறிப்பிட்டோம். இதில் ரெலோ ஸ்ரீகாந்தாவும் உறுதியாக இருந்தார்.

இந்நிலையில் காலத்தை இழுத்தடிக்கும் நோக்கில் 30ஆம் திகதி முடிவெடுப்போம் என்றும், அன்றுதான் சுமந்திரன் வருவார் என்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

31ஆம் திகதி அஞ்சல் வாக்களிப்பு இருக்கும்நிலையில் 30 ஆம் திகதி இரவு முடிவெடுப்பது என்பது எவ்வளவு பொறுப்பானது? தலைவர் என்ற வகையில் உறுதியான முடிவெடுக்க முடியாத நிலையில் தமிழரசுக் கட்சித் தலைவர் இருப்பது கவலைக்குரியதாகவே அன்று அனைவராலும் நோக்கப்பட்டது.

30ஆம் திகதியும் உறுதியான முடிவு எடுக்கப்படாது என்பதை நாம் உணர்ந்த



மையுடன் இதனை மாணவர்களுக்குத் தெரிவித்திருந்தோம். எமது கட்சியின் நிலைப்பாட்டை அஞ்சல் வாக்களிப்புக்கு முதல் தெரிவித்திருந்தோம்.

எமது இந்த நிலைப்பாடு சரியானது என்பது 30ஆம் திகதிக் கூட்டத்தில் நிரூபணமாகியது.

அன்றைய கூட்டத்தில் கூட தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள், அஞ்சல் வாக்களிப்புக்கு முன் தமது முடிவை அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலைப்பாட்டிலே இருந்தனர்.

தமிழ்மக்கள்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகியவற்றின் பிரதிநிதிகள் 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக எந்தவொரு பிரதான வேட்பாளரும் உரையாட விரும்பாததால் எவருக்கும் வாக்களிக்குமாறு கோருவதில்லை என்ற முடிவை வெளிப்படுத்தியபோது தமிழரசுக் கட்சி மட்டும் உடன்படவில்லை. இதனால்தான் நேர்மையான உடன்பாட்டை அடைய முடியாமல் போனது.

இதன் மூலம் தமிழரின் ஒற்றுமைக்கும், பேரம் பேசுதலுக்கும் யார் தடையாக இருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

காலைக்கதிர் Kalaikathir



# ஒன்று – எங்கள் இனத்தைக் கருவறுத்த பூதம் மற்றது – வெள்ளையுடன் வரும் குட்டிப் பிசாசு

நாங்கள் எதிர்பார்த்த அனைத்தும் கிடைக்கவில்லை என்பதும் உண்மை, எங்களது எதிர்பார்ப்புக்களும் மிகையானவை என்பதும் உண்மை. முப்படைகளை வைத்துக் கொண்டு, மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பையும், மூன்றில் இரண்டு நீர்ப்பரப்பையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, கொழும்பையே ஆட்டிப்படைத்த காலத்திலேயே அடையமுடையாதவற்றை, பதினாறு பேரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி விட்டு அடையலாம் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்ததும் பிழைதானே?

ஓர் இனமாக, ஒரே சனமாக எங்களுக்கு நிறைய கெட்ட பழக்கங்கள் இருக்கின்றன. இருப்பதை விட்டு விட்டு, இல்லாததைத் தேடி அங்கலாய்ப்பது அதில் ஒன்று. எதைத் தந்தாலும் அதில் நொட்டை நொசுக்கு பார்த்துக் குறை கூறித் திரிவது இன்னுமொன்று.

சந்தோசத்தை சத்தமாக கொண்டாடாமல் அடக்கி வாசித்து விட்டு, அவலத்தை அகிலமெல்லாம் கேட்கத் தக்கத்தாக அழுது ஒப்பாரி வைப்பதும் மற்றுமொரு கெட்ட பழக்கம்.

எங்களுக்கு எந்த சின்ன நல்லதும் நடந்து விடக் கூடாது, நடந்தால் தப்பாகி விடும் என்ன மனநிலையும் அதில் அடக்கம்.

2015 தேர்தலில் மைத்திரி –ரணிலை ஆட்சிக்கு கொண்டு வந்ததால் ஒரு பிரயோசனமும் இல்லை



என்று அலட்டித் திரியும் நாங்கள், மறுவளமாக மஹிந்த ஆட்சிப்பீடமேறியிருந்தால் அரங்கேறியிருக்கக் கூடிய அவலங்களைப் பற்றிக் கதைக்க மாட்டோம்.

உடைந்து போன இதயங்களின் உடன்படிக்கைகள் பற்றியும், நாங்கள் போட்ட உப்பை மறந்தவர்கள் பற்றியும் பேசும் எங்கள் நாக்குகள், 2015 தேர்தலை ஒட்டிய காலங்களில் வலுப்பெறத் தொடங்கியிருந்த மஹிந்தவின் சர்வாதிகார அடக்குமுறை ஆட்சியின் கொடூரக் கரங்களைப் பற்றி பேசவே பயப்படும்.

வீஹிப்புயுடனான பேச்சுகளை ஒரு தலைப்பட்ச மாக முறித்து, முள்ளிவாய்க்கால் நினைவுநாள்களையும் மாவீரர் தின நினைவேந்தலையும் தடுத்து, முஸ்லிம்களிற்கு எதிராக பேருவளையில் இனக்கலவரம் நிகழ்த்தி, சர்வதேசத்தின் நியாயத்திற்கான குரல்களையும் புறந்தள்ளி, அரசமைப்பைத் தமக்குச் சாதகமாக மாற்றி, இன்னும் முப்பது ஆண்டுகள் தொடர்ந்து தங்கள் குடும்பத்தை எந்தக் கொம்பனாலும் ஆட்சியில் இருந்து அகற்ற முடியாது என்ற இறுமாப்பில், தேர்தலிற்கு இரண்டு வருடங்கள் இருக்கத் தக்கதாகவே, தேர்தலை சந்தித்த மஹிந்தவின் இருண்ட காலம், 2015 தேர்தலில் அவர்கள் வென்றிருந்தால் இன்றும் தொடர்ந்து கொண்டிருந்திருக்கும்.

2015 தேர்தலில் மஹிந்த வென்றிருந்தால், எங்கள் மீதான அடக்குமுறையும் ஒடுக்குதலும் இன்னும் வலுவடைந்திருக்கும். அவர்களது தோல்வி, மூச்சு விட எங்களுக்கு கிடைத்த அவகாசமாகவும் பார்க்கப்பட வேண்டும். அதற்கும் மேலாக அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் அழிவிற்குள்ளான இனத்தின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புதற்கான வாய்ப்பாகவும் நோக்கப்பட வேண்டும்.

மூச்சு விடக் கிடைத்த அந்த ஐந்நாண்டுகளில் விடுவிக்கப்படவே படாது என்று சொல்லப்பட்ட சம்பூர், மயிலிட்டி துறைமுகம் உட்பட பல காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன, நூறுக்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் வெளியே வந்திருக்கிறார்கள், அதிகாரப் பரவலாகத்தின் அடிப்படையிலான அரசியல் யாப்பின் நகல் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது, யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது, மெல்ல, மெல்ல வடக்கிலும் கிழக்கிலும் பொருளாதார செயற்பாடுகள் முளை விடத் தொடங்கியிருக்கின்றன.

நாங்கள் எதிர்பார்த்த அனைத்தும் கிடைக்கவில்லை என்பதும் உண்மை, எங்களது எதிர்பார்ப்புக்களும் மிகையானவை என்பதும் உண்மை. முப்படைகளை வைத்துக் கொண்டு, மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பையும், மூன்றில் இரண்டு நீர்ப்பரப்பையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, கொழும்பையே ஆட்டிப்படைத்த காலத்திலேயே அடையமுடையாதவற்றை, பதினாறு பேரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி விட்டு அடையலாம் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்ததும் பிழைதானே?

மஹிந்த தோற்று, ரணில் வென்று ஆட்சி நடாத்திய அதே காலப்குதியில், நாங்கள் நடாத்திய வட மாகாண சபையின் சீத்துவம் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாடாளுமன்றம் சென்றவர்கள் அரசியல் தீர்வை பற்றிப் பேச, வட மாகாண சபை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களைத் தீர்க்கும் என்று பார்த்தால், வினைத்தினற்ற நிர்வாகத்தை கொண்டு நடத்திக் காட்டி தமிழினத் திற்கே அவப்பெயர் தேடித்தந்து விட்டார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

மழை விட்டும் தூறல் நிற்காத மாதிரி, வட மாகாண சபையின் ஆட்சி முடிந்தும், தனது அரசியல் முதிர்ச்சியற்ற செயற்பாட்டால் இன்றும் மஹிந்த தரப்பிற்கு மேலும் மேலும் சிங்கள இனவாத வாக்குகளை அள்ளிச் சேர்க்கும் கைங்கரியத்தை செய்து, எங்களின் அழிவிற்கு விக்னேஸ்வரன் அடித்தளமிட்டுக் கொண்டிருக்கின்றார்.

## இரண்டில் எதைத் தேர்வது என்பதே இத்தேர்தல்

2005 ஜனாதிபதி தேர்தலில் ரணிலை தோற்கடித்தது தவறு என்ற உணர்வு எங்கள் மனங்களில் உறங்கிக் கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் எடுத்த அரசியல் முடிவை வெளிப்படையாக விமர்சிக்க எங்களுக்கு மனம் வராது. தங்கள் உயிரைக் கொடுத்து எங்களுக்காக போராடியவர்கள் செய்ததில் ஏதாவது நியாயம் இருக்கும் என்ற நம்பிக்கை எந்த எதிர்மறையான விமர்சனத்தையும் முறியடித்துவிடும்.

பிரேமதாசவை ஏன் கொன்டவங்கள் என்று தெரியேல்ல.. என்ற வினாவும் அதே போலத் தான். ஆழ் மனம் கேட்கும், நண்பர்களுக்குள் கதைபடும், ஆனால் பகிரங்க வெளியில் விமர்சிக்கப்படாது. விடுதலைப் புலிகளை ஆழமாக நேசித்த மக்களின் மனப்போக்கு அது. அப்பா பிரேமதாச தீர்க்காமல் போன பிரச்சினையை மகன் பிரேமதாச தீர்த்து வைக்க மாட்டாரா என்ற ஆதங்கமும் எதிர்பார்ப்பும் மெல்ல மெல்ல எழத்தான் செய்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனங்களும் வாக்குறுதிகளும் ஆட்சி பீடம் ஏறிய மறு நாளே மறக்கப்பட்டு விடும் என்பது நாமனைவரும் அறிந்த வரலாற்றுப் பாடம். அதே வரலாறே, கோட்டா வந்தால் எப்படி ஆட்சி நடாத்துவார், ராஜபக்ஷ குடும்பம் எப்படி ஆட்டம் போடும் என்பதற்கான சான்றுகளையும் தந்து விட்டு சென்றிருக்கிறது.

கோட்டா வந்தால், அவலம் வரும், அவலம் வந்தால் சனம் அழும், சனம் அழுதால் சர்வதேசம் திரும்பிப் பார்க்கும் என்று தவறான கணக்கு போட்டு அவல அரசியல் நடாத்த முனையும் தரப்புக்களே, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுத்திருக்கும் சஜித் பிரேமதாஸவிற்கு சார்பான அறிவிப்பை எதிர்த்து நிற்கின்றன.

பகிஷ்கரிப்பு கோரும், எந்தச் சிங்கள வேட்பாளருக்கும் வாக்களிக்குமாறு மக்களை கோர முடியாது என்ற பிரகடனமும், மக்களிற்கு அவலத்தை கொடுத்து தாங்கள் அரசியல் பிழைப்பு நடாத்தப் போடப்பட்ட திட்டங்களின் வெளிப்பாடாயாகும்.



சஜித் வந்தால் ஈழம் தரமாட்டார், ஆனால் எல்லாம் தருவார் என்பதல்ல. சஜித்தின் கடந்த கால அரசியல் செயற்பாடுகளையும் அவர் சார்ந்திருக்கும் கட்சியின் கடந்த ஐந்தாண்டு ஆட்சியையும் ஆராய்ந்து பார்க்கும் போது, அவர்கள் தந்த அவலங்கள் மஹிந்த தரப்பு தந்த அவலங்களை விட எத்தனையோ மடங்கு குறைவானது என்பது மறுக்க முடியாத உண்மை.

இது என்னடா மோட்டுத்தனமா இருக்கு, அவனும் அவலம் தாறான், இவனும் அவலம் தாறான், அப்ப ஏன் அவனுக்கு போடனும்? என்று கேட்டால், எவனுக்கும் அவலத்தை கொடுத்து எங்களது அவ



லத்தை தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் நாங்கள் இருக்கும் பொழுது, எங்களிற்கு எவனொரு வன் குறைவான அவலத்தை தருவான் என்று எதிர்பார்க்கிறோமோ அவனுக்கே வாக்குகளை வழங்குவதே நல்லது என்பது பதிலாகும்.

இது சிங்களத்தின் தேர்தல்.. நாங்கள் வாக்களிப்பதால் ஒரு பிரயோசனமும் இல்லை.. நாங்க வேற நாடுடா அவங்க வேறு நாடுடா என்று பறையும் நல்ல நண்பர்களும் இருக்கிறார்கள். கொழும்பில் நடக்கும் ஆட்சி வடக்கிலும் கிழக்கிலும் வாழும் எங்களின் தலைவிதியை நிர்ணயிக்கவல்லது என்றால் அந்த ஆட்சியை தீர்மானிப்பதில் நாங்களும் பங்குபற்றியே ஆக வேண்டும். எங்கள் ஜனநாயக கடமையை நாங்கள் சரியாக செய்வோம். நாங்கள் சரியானதை தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் எங்களுக்கும் எதிர்காலத் தில் சரியானதே நடக்கும்.

2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கவனம் முழுவதும் அரசியல் தீர்வை பெறுவதிலேயே இருந்ததால், வடக்கு, கிழக்கின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை செலுத்தப்படாதது ஒரு குறைபாடே.

கடந்தாண்டு இறுதியில் கம்பெரலிய திட்டத்தின் ஊடாக கிடைத்த கணிசமானளவு நிதியையும், எங்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வாழ்வாதார முயற்சிகளில் முதலீடு செய்வதற்கான சரியான திட்டங்களை குறுகிய காலத்தில் வகுப்பதற்கான வளங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் இல்லாமல் போனதால் தான், இலகுவில் ஒப்பேற்றக் கூடிய வீதிகள் புனரமைப்பிலும் பாடசாலைக் கட்டடங்கள் கட்டுவதிலும் செலவிடப்பட வேண்டியதாகி விட்டது போலிருக்கிறது.

கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட அரசியல் யாப்பு முயற்சிகளைத் தொடர சஜித் வாக்குறுதியளித்திருப்பதாலும், வடக்கையும், கிழக்கையும் மீளக்கட்டியமைக்க சர்வதேச உதவ வழங்கும் நாடுகளின் மாநாட்டைக் கூட்டவும் சஜித் வாக்குறுதியளித்திருப்பதாலும், இரண்டையும் அவர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், எங்களின் கவனம் அடுத்து வரும் ஆண்டுகளில் சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கியும் நகர வேண்டும்.

புலம் பெயர் ஈழத் தமிழர்கள், தமிழகம், சிங்கப்பூர் மற்றும் மலேசிய தமிழ் சமூகங்களை ஒன்றிணைத்து, யுத்தத்தால் சிதைந்து போன தமிழர் தாயகப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை செயற்படுத்த நாங்கள் முனைய வேண்டும்.

பின்னடைந்து போயுள்ள எங்கள் கல்வி தரத்தை முன்னேற்றுதல், எங்களூர் விவசாயிகளதும் மீனவர்களதும் அறுவடைகளை சந்தைப்படுத்துதல், தொழில் வாய்ப்புக்களை வழங்கவல்ல சிறிய தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்துதல் என்ற மூன்று முனைகளில் எங்கள் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால், இழந்து போன எங்கள் மண்ணின் மாட்சிமை நிச்சயமாக மீண்டும் மலரும்.

எங்கள் மண்ணில் மாட்சிமை மீண்டும் மலர வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்றால் மஹிந்தவின் மொட்டு மலரவே கூடாது. கோட்டாவும் சஜித்தும் பேரினவாதப் பிசாசுகள் தான், ஒன்று நாங்கள் நன்கு அறிந்த, எங்கள் இனத்தை கருவறுத்த பூதம், மற்றது வெள்ளையும் சொள்ளையுமாக வந்து நின்று காதல் பாட்டு பாடும் குட்டிப் பிசாசு.

பேரழிவுகளைத் தந்த, நாங்கள் அறிந்த பூதம் வேண்டுமா இல்லை குறையான தீமைகளைத் தர வல்ல குட்டிப் பிசாசு வேணுமா என்ற தேர்வுகளே நம்முன் வைக்கப்பட்டுள்ளன.

நன்றி: – 'கனவும் நினைவும்' புளொக் ஸ்பொட்

# 2 அமைச்சர்கள், 3 எம்.பிக்கள் பஸிலுடன் இரகசியப் பேச்சு !

கொழும்பு, நவ. 10

அரசின் இரண்டு அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் மூவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ வுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவை வெளியிட்டு அவர்கள் இந்தப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

தேர்தலுக்கு முன்னர் கோட்டாபயவுடன் இணைவது குறித்து பேசப்பட்டாலும் அவர்களில் ஓரிருவரைத் தவிர மற்றவர்களை உடனடியாக இணைத்துக் கொள்வதில் பொதுஜன பெரமுன தரப்பில் தயக்கம் காட்டப்படுவதாகத் தெரிகிறது.

அப்படி இணைவோருக்கு தொகுதி அமைப்பாளர் பதவிகளை வழங்குவதில் உள்ள சிக்கல் நிலைமையே இதற்கான காரணம் என அறியமுடிந்தது.

தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் புதிய பிரதமரைத் தெரிவு செய்வார் என சஜித் பிரேமதாஸ அறிவித்த நிலையில் ரணில் ஆதரவு அமைச்சர்மார் மற்றும் எம்.பிக்களே இவ்வாறு பஸிலுடன் மறைமுகப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

உ

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

"வித்தகம்"



"கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்"

காலம்:- 12.11.2019 செவ்வாய் மாலை 5.00 மணி

இடம் :- கம்பன் கோட்டம், நல்லூர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல் : திரு. சி.வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர்-வலம்புரி)
திரு. என்.குகநாதன் (தலைவர்-டான் ரி.வி.)
கடவுள் வாழ்த்து : திரு. ம.தயாபரன்
தலைமையுரை : கலாநிதி ரி. கணேசலிங்கம் (அரசியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

கருத்துக்களம்

ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்களும்

நெறி செய்வோர்

கவிஞர் சோ.பத்மநாதன்
(முன்னாள் அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை)

கம்பவாரிதி இ.ஜெயராஜ்
(ஸ்தாபகர், கம்பன் கழகம்)

திரு.சு.திவகலாலா
(முன்னாள் செயலர், வடகிழக்கு மாகாண கல்வியமைச்சு)

கருத்துரைப்போர்

கலாநிதி எஸ். சிவகுமார்
(பொறியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

திரு.சி.தவராசா
(முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர், வடமாகாணசபை)

திரு.க. அருந்தவபாலன்
(ஊடகப்பேச்சாளர், தமிழ் மக்கள் கூட்டணி)

திரு.ந. வித்தியாதரன்
(ஆசிரியர், காலைக்கதிர் )

## இருளிலிருந்து மின்சார சபையை மீட்பதற்கு நடவடிக்கை வேண்டும்

### ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை



கொழும்பு, நவ. 10

மின்சார சபையை இருளில் இருந்து மீட்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மின்சார சபையினால் இந்த ஆண்டு 8900 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மின்சார சபையில் ஏற்பட்டிருக்கும் இந்த பாரிய நெருக்கடி தொடர்பான பொறுப்பில் இருந்து பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு விலகிக்கொள்ள முடியா தெனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

நீர்வழங்கல், பெற்றோலியம் மற்றும் இலங்கை விமான சேவை ஆகிய நிறுவனங்களில் இடம் பெறும் முறைக்கேடுகள் நாட்டை பாரிய பொருளா தார வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றுள்ளன எனவும் ஜனாதி பதி இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நேபாளத்திலும் நடைபெறுகிறது

கொழும்பு, நவ. 10

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நேபாளத்திலும் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

13 ஆவது தெற்காசிய விளை யாட்டுப்போட்டி நேபாளத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இம்முறை நடைபெற வுள்ள கல்விப் பொதுத்தராதர சாதா ரண தரப் பரீட்சையில் தோற்ற வுள்ள ஏழு பரீட்சாத்திகள் பங்கேற்க வுள்ளனர்.

இந்த நிலையிலேயே அந்த ஏழு பரீட்சாத்திகளும் நேபாளத்தில் வைத்துப் பரீட்சைக்குத் தோற்றவுள் ளனர் எனக் கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.

நேபாளத்தில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்திலேயே இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையானது இலங் கையில் பின்பற்றப்படும் அதே ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே நேபாளத்திலும் நடத்தப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களமும், வெளிவிவகார அமைச்சும் இணைந்து இதற்குரிய நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளன. (ஐ)

## மீண்டும் திறக்கப்படுகிறது ரஜரட்டை பல்கலைக்கழகம்!

கொழும்பு, நவ. 10

வைரஸ் காய்ச்சலின் காரணமாக மூடப்பட்டிருந்த ரஜரட்டைப் பல்கலைக்கழ கத்தின் நான்கு பீடங்களும் எதிர்வரும் 25 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள் ளதாகப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள் ளது.

இதன்படி தொழில்நுட்ப முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், மனையியல் மற்றும் விவசாய பீடங்க ளின் கல்வி நடவடிக்கை களும், பரீட்சைகளும் நடத் தப்படும் என்று பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித் துள்ளது.

விடுதி வசதிகளைக் கொண்ட மாணவர்கள் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் மாலை 4 மணி அளவில் விடுதிகளுக்குச் சமூகம ளிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வைரஸ் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட மாணவர் ஒருவர் கண்டி பொது வைத்தியசாலை யில் உயிரிழந்ததை தொடர்ந்து ரஜரட்டை பல் கலைக்கழகம் மூடப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பேஸ்புக் பார்ட்டி; 21 பேர் சிக்கினர்

கொழும்பு, நவ. 10

பேஸ்புக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட இரவு விருந்து நிகழ்வொன்றை சுற்றிவளைத்த பொலிஸார் அங்கிருந்த 21 பேரைக் கைது செய்துள்ளனர் .

மீகொடைப் பகுதியில் கைது செய்யப்பட்ட இவர்களில் 9 பெண்களும் உள்ளடங்குகின் றனர் எனக் கூறும் பொலிஸார், கைதானவர் களிடம் இருந்து போதைப்பொருள்களை மீட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டனர்.

## சஜித்துக்கு ஆதரவாக கூட்டமைப்பின் முதல் கூட்டம் நேற்று வவுனியாவில்



புதிய ஜனநாயக முன்ன ணியின் ஜனாதிபதி வேட் பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல் கூட் டம் வவுனியாவில் நேற்று ஆரம்பமானது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேம தாஸவை ஆதரிப்பதாக அறிவித்துள்ள நிலையில் நேற்று முதல் கூட்டம் தொடங்கியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் வவு னியா மாவட்ட செயலாளர் முத்துராசா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட் டத்தில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா உள் ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்க ளும் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட முக்கி யஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# வடமாகாண
# மரநடுகை மாதம்
## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**



**மாண்ட வீரர் கனவு பலிக்க**
**மழையின் பொழிவில் தமிழ் மண் குளிக்க...**

**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
## TAMIL NATIONAL GREEN ORGANIZATION




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2019 இல் வெளியிடப்பெற்றது.